அரங்கம் செய்திகள்
தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்
வார இதழ் – இலவசம்
வெள்ளி, மார்ச் 15, 2019. இதழ் - 55






**மட்டக்களப்பில் வக்கிக்கரத்தையிருந்து ஆட்டோ ரிக்ஸா வரை**


மட்டு மாவட்ட விவசாய பொறியியற் கூட்டுறவுச்...

பக்கம் - 07



**கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்துதலும் தமிழ் முஸ்லிம் மக்களின் உறவும்**

பக்கம் - 04



**சிங்கக் கொடி, சிங்களக் கொடி, தேசியக் கொடி!?**

"பி.ப 4 மணி. கண்டி பிரதானிகள், திசாவ, அதிகாரி...

பக்கம் -06



**படுவான்கரைப் பெண்கள் சாதனையாளர்களே!**

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள படுவான்கரைப்பிரதேசத்து...

பக்கம் - 11

# உத்தேச கல்முனை வடக்கு (தமிழ்) பிரதேச செயலகப் பிரிவின் உருவாக்கத்தில் என்ன தவறு? ஏன் இந்த இழுத்தடிப்பு?



செங்கதிரோன் த. கோபாலகிருஸ்ணன் ---

கிழக்கு இலங்கை அரபுக் கல்லூரியின் 9 வது பட்டமளிப்பு விழா அண்மையில் அட்டாளைச்சேனையில் நடைபெற்ற பின்னர் செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும் போது,

" கல்முனை உபபிரதேச செயலகத்தை நிலத்தொடர்பற்ற ரீதியில் பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தாமல், இரு சமூகமும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் எல்லை மீள்நிர்ணயம் செய்யப்பட்ட பின்னர் நிலத்தொடர்பு அடிப்படையில் மாத்திரமே தரமுயர்த்த வேண்டும்" என்று ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்ததாக திங்கட்கிழமை, மார்ச் 11, 2019 வீரகேசரியில் (பக்கம் 02) செய்தி வெளியாகியுள்ளது.

இச் செய்தியை முழுமையாக படித்தபோது அதன் உள்ளடக்கம் அம்பாறை மாவட்ட தமிழர்களைப் பொறுத்தவரை குறிப்பாக கல்முனை பிரதேச தமிழர்களைப் பொறுத்தவரை "இனிப்பு தடவிய பாகற்காய்" ஆகும்.

உண்மையில் இந்த விடயத்தில் நிலத்தொடர்பின்மை என்ற பிரச்சனையோ அல்லது எல்லை மீள் நிர்ணயம் என்ற சிக்கலோ இல்லை.

உத்தேச கல்முனை வடக்கு (தமிழ்) பிரதேச செயலகப்பிரிவின் நிலத்தொடர்போடு கூடிய வரையறுக்கப்பெற்ற தெளிவான எல்லைகள் வருமாறு

வடக்கு : மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கு எல்லை (பெரியநீலாவணைக் கிராமம்)

தெற்கு : கல்முனைத் தரவைப்பிள்ளையார் கோவில் வீதி
கிழக்கு: வங்காள விரிகுடாக் கடல்
மேற்கு : கிட்டங்கி வாவி

மேற்கூறப்பெற்றவாறு எல்லைகள் வரையறுக்கப்பெற்ற நிலப்பரப்புக்குள் கல்முனை, பாண்டிருப்பு, மணற்சேனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, கிட்டங்கி, மருதமுனை, பெரியநீலாவணை ஆகிய கிராமங்கள் உள்ளடங்குகின்றன.

அப்படியாயின் இதில் நிலத்தொடர்பின்மை, எல்லைகள் மீள் நிர்ணயம் என்ற

தொடர்ச்சி... (பக்கம் -03 )

# இளைஞர்கள் மீது விசேட அதிரடிப்படையினர் தாக்குதல்;

## வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞனுக்கு 14 நாள் விளக்க மறியல் !



விசேட அதிரடிப் படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த இளைஞர் ஒருவர் 14 நாள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை (11) காலை மட்டக்களப்பு கரடியனாறு பகுதிக்கு சென்ற விசேட அதிரடி படையினர் அந்தப்பகுதியில் நின்ற இளைஞர் ஒருவரை மரம் வெட்டியதாக கூறி சரமாரியாக தாக்கியுள்ளனர்.

தாக்குதலில் படுகாயமடைந்து, மயக்கமுற்ற இளைஞர் விசேட அதிரடிப்படையினரால் ஏறாவூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய

தொடர்ச்சி... (பக்கம் -02 )

# மகிந்த- மைத்திரி மோதலால் ஜனாதிபதி தேர்தலில் மூன்று பிரதான வேட்பாளர்கள்

--- நி.அமிர்தஸன் ---

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச ஆகிய இருவருக்கிடையேயும் கருத்து முரண்பாடுகள் அதிகரித்துள்ளதால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன தனித்துப் போட்டியிடும் சாத்தியம் உள்ளதாக



தொடர்ச்சி... (பக்கம் -15 )



## ஆசிரியர் போராட்டம்




அதிபர் மற்றும் ஆசிரியர்கள் தமது சம்பள முரண்பாட்டை நீக்கக்கோரி புதன்கிழமை (13) மட்டக்களப்பின் பல இடங்களில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியர்கள் கறுப்பு பட்டி அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த 20 வருடங்களுக்கு மேல் நிலவும் ஆசிரியர்கள், அதிபர்கள் சேவை சம்பள முரண்பாட்டை தீர்ப்பது தொடர்பில் அரசாங்கம் இழுத்தடிப்புச் செய்வதாகக்கூறி அதற்கெதிராக போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. மூன்று மாத நிலுவைப்பணம் உள்ளிட்ட மேலும் ஆறு கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆரையம்பதி இராமகிருஷ்ண மிஷன் மகாவித்தியாலய ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்.

## மகளிர் தின நிகழ்வுகள்



பெண்களும் ஆண்களுக்கு நிகராக அனைத்திலும் பங்களிப்பு செய்தல் அவசியம் எனும் கருப்பொருளில் இன்று Future Mind சமூக மேம்பாட்டு அமைப்பினால் காலை 7.30 மணியளவில் மட் / வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் துளிர் செயற்பாட்டின் முதலாவது நிகழ்வாக மரக்கன்றுகள் நடும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் கோறளைப்பற்று பிரதேச சபை தவிசாளர் சோபா ஜெயரஞ்சித், கல்லூரியின் முதல்வர், ஆசிரியர்கள், சுற்றாடல் படையணி, பொறுப்பாசிரியர்கள், போக்குவரத்து பொலீஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இதன் போது தவிசாளர் மற்றும் அதிபரினால் பெண்கள் சம்பந்தமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது. இதன் அடுத்த நிகழ்வு காலை 8.30 மணியளவில் கிரான் மத்திய கல்லூரியில் மர நடுகை ஆரம்பமானது. இந் நிகழ்வில் கல்லூரி முதல்வர், வாழைச்சேனை கிளை HNB ASSURANCE முகாமையாளர் மற்றும் ஊழியர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோர் பங்கு பற்றினர்.

அதனைத் தொடர்ந்து கோறளைப்பற்று தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டினால் வாழைச்சேனை பெண் வர்த்தகர்களை கௌரவிக்கும் முகமாக அவர்களுக்கான குடைகளும், கூடைகளும் கொடுக்கப்பட்டது. இதன் போது சபை தவிசாளர் மற்றும் வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் பெற்றோர் போராட்டம்




(கதிரவன், திருகோணமலை)

கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் பெற்றோர்களால் திருகோணமலையில் சனிக்கிழமை 2019.03.09 காலை கையெழுத்து சேகரிப்பும் கண்டண ஊர்வலமும் நடத்தப்பட்டது.

இதில் மட்டக்களப்பு, வவுனியா. கிளிநொச்சி யாழ்ப்பாணம் மாவட்ட பெற்றோர்களும் உறவினர்களும் கலந்து கொண்டர். காலை 10.30 மணிக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் முன்னால் கையெழுத்து சேகரிப்பு இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து மதியம் 1.00 மணிக்கு முற்றவெளி மைதானத்தில் இருந்து பத்திரகாளி அம்பாள் ஆலயம் வரை கண்டன ஊர்வலம் நடத்தப்பட்டு, அங்கு பிராத்தனையும் இடம்பெற்றது. ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா இவ்விடயத்தில் தலையிட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

## தமிழர் தகவல் நடுவத்தின் ''வரதகுமார்'' காலமானார்



பிரித்தானியாவை தளமாகக் கொண்டு செயற்படும் தமிழர் தகவல் நடுவத்தின் இயக்குனரும் இணைப்பாளருமான வைரமுத்து வரதகுமார் தனது 70வது வயதில் லண்டனில் காலமானார்.

1980 கள் முதல் தமிழர் ஆவணப்படுத்தலில் முழுமூச்சாக இயங்கியவர் இவர். பலதரப்பினருடனும் இணைந்து, தமிழர் நலன் நோக்கிய முன்னெடுப்புக்களை காத்திரமாக ஆனால், மிக அமைதியாக செய்துவந்தவர் வரதகுமார்.

அன்னாருக்கு "அரங்கம்" தனது அஞ்சலிகளை தெரிவிக்கிறது.

## மட்டக்களப்புச் சிறையில் கணவனுக்கு பொரித்த மீனுக்குள் ஹெரோயின் எடுத்துச் சென்ற மனைவி



மட்டக்களப்பு சிறைச்சாலையில் கைதியாக உள்ள கணவருக்கு சாப்பாட்டிற்குள் பொரித்த மீனின் உள்ளே 210 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப் பொருளை வைத்து கொடுக்க முயன்ற மனைவியை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் புதன்கிழமை கைது செய்ததாக மட்டு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று ஆலம்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் போதைப் பொருளுடன் அண்மையில் கைது செய்யப்பட்டு, மட்டக்களப்பு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் குறித்த நபரின் மனைவி கணவனை பார்ப்பதற்காக சம்பவ தினமான புதன்கிழமை பகல் 12 மணியளவில் சிறைச்சாலைக்கு சாப்பாட்டுடன் சென்றிருந்தார்

சிறைச்சாலை அதிகாரிகள் அந்தச் சாப்பாட்டுப் பொதியை சோதனை செய்தபோது அதில் பொரித்த மீனின் குடல் பகுதியில் சூட்சமமான முறையில் 210 மில்லிக்கிராம் ஹரோயின் போதைப் பொருளை மறைத்து எடுத்துவந்துள்ளதை கண்டுபிடித்தனர்.

தொடர்ச்சி...

## இளைஞர்கள் மீது விசேட அதிரடிப்படையினர் தாக்குதல்;

சாலையில் அனுமதிக்கப்பட்டு, விசேட அதிரடிப்படையினரின் தீவிர கண்காணிப்பில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

விசேட அதிரடி படையினரின் தாக்குதலுக்கு உள்ளான இளைஞர் கரடியனாறு பகுதியை சேர்ந்த மன்னன் கஜந்தன் 27 என தெரியவந்துள்ளதுடன் அவர் மீது விசேட அதிரடிப்படையினர் வனப் பரிபாலன சபையின் ஊடாக மரம் வெட்டிய குற்றச்சாட்டில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

தற்போது குறித்த இளைஞரை நீதிமன்றில் அஜர்படுத்தி 14 நாள் விளக்கமறியலில் அவர் வைக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது

கடந்த திங்கட்கிழமை (11) காலை 9.00 மணியளவில் மடக்களப்பு கரடியணாறு பகுதிக்கு சென்ற விசேடே அதிரடி படையினர் அந்தப்பகுதியில் நின்ற இளைஞர் ஒருவர் மீது மரம் வெட்டியதாக கூறி சரமாரியாக தாக்கியுள்ளனர்.

குறித்த தாக்குதலில் படுகாயமடைந்த நபரை உடனடியாக இழுப்பிடிச்சேனை வன பரிபாலனசபைக்கு விசேட அதிரடி படையினர் கொண்டு சென்றுள்ளனர். தாக்குதலுக்குள்ளாகியுள்ள நபரின் உடல் நிலை ஆபத்தன நிலையில் இருந்தமையினால் குறித்த இளைஞரை பொறுப்பேற்க வனப் பரிபாலனசபை அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

பின்னர் வனபரிபாலன சபையின் வாகனத்தில் படுகாயமடைந்த இளைஞரை ஏற்றிய விசேட அதிரடி படையினர் ஏறாவூர் தள வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவரது உடல்நிலை மோசமாக இருந்ததனால் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்கா மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு படுகாயமடைந்த இளைஞனுக்கு விசேட அதிரடி படையினரின் விசேட கண்காணிப்பின் கீழ் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. அப்போது தாக்குதலுக்கு உள்ளாகிக்கிய இளைஞரை பார்வையிட உறவினர்களுக்கு அனுமதி வழங்க விசேட அதிரடிப் படை அதிகாரிகள் மறுத்துள்ளனர். சட்டவிரோதமாக மரம் வெட்டியதாக குற்றம் சாட்டப்பட்ட இளைஞரை கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்காது அவர் மீது சரமாரியாக தாக்கியதாக அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இதனால் அப்பகுதியில் பதற்ற நிலையும் உருவானது.

விசேட அதிரடிப்படையினர் குறித்த இளைஞரை தீவிரவாதியைப்போல் சப்பாத்துக்காலால் உதைத்து சித்திரவதை செய்ததாகவும் இதனால் அவர் மயக்கமடைந்த நிலையில் விசேட அதிரடிப்படையினரால் வாகனத்தில் ஏற்றி கொண்டு செல்லப்பட்டதாக காயமடைந்த இளைஞரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதே நேரம் குறித்த சம்பவம் சம்பந்தமாக கரடியனாறு பொலீஸில் முறைப்பாடு செய்யச் சென்றபோது விசேட அதிரடிப்படையினருக்கு எதிராக தங்களால் முறைப்பாடு பதிவுசெய்ய முடியாது என கரடியனாறு பொலீசார் தெரிவித்ததாகவும் பின்னர் மனிதவுரிமை ஆணைக்குழுவில் தாங்கள் முறைப்பாடு பதிவு செய்ததாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். இதேவேளை தாக்குதலுக்கு உள்ளாகிய இளைஞரின் வீட்டிற்கு சென்ற விசேட அதிரடிப்படையின் உயர் அதிகாரிகள் இளைஞரின் உறவினர்களிடம் தங்களது தவறை ஏற்றுக்கொண்டு மன்னிப்பு கோரியதாக இளைஞரின் உறவினர்கள் அரங்கத்திடம் தெரிவித்தனர்.

## காயன்குடா குளத்தில் மூழ்கி மாணவன் மரணம்

மட்டக்களப்பு – செங்கலடி பதுளை வீதியில் காயன்குடா குளத்தில் மூழ்கி பாடசாலை மாணவனொருவன் உயிரிழந்துள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்

கடந்த செவ்வாய்கிழமை (12) மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் காயன்குடா கண்ணகி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் ஜெயராசா ஜனார்தனன் என்ற மாணவனே உயிரிழந்துள்ளார். தனது சகோதரியுடன் குளத்தில் நீராடச் சென்ற அவர், குளத்தின் ஆழத்திற்கு நீடாடச் சென்றவேளை மூழ்கியுள்ளார். அவர் மூழ்குவதை அவதானித்த சகோதரி அழுதபோது அயலவர்கள் வந்து குறித்த மாணவனை மீட்ட போதும் அவர் உயிரிழந்து காணப்பட்டுள்ளார்.

காயன்குடா பகுதியில் நீர்த் தட்டுப்பாடு காரணமாக அப்பிரதேசத்தில் வாழும் சுமார் 250 குடும்பங்கள் குடிநீரின்றி பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றன.

குடிநீருக்காக இரண்டு குழாய் கிணறுகள் மாத்திரமே அங்கு அமைக்கப்பட்டுள்ள. குழிப்பதற்காக குளத்தினையே பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி...

## சுராங்கனிட்ட மாலு கெனாவா யார் அந்த சுராங்கனி ? ஈஸ்வரனுக்கும் சுராங்கனிக்கும் என்ன தொடர்பு?

சிக்கல்கள் எழத்தேவையில்லை. ஆனால் அமைச்சர் ஏன் அவ்வாறு கூறியுள்ளார் என்பதை வைத்துப் பார்க்கும் போது 1989ம் ஆண்டிலிருந்து தமிழர்கள் விடுத்துவரும் இக்கோரிக்கையின் நிறைவேற்றத்தை மேலும் இழுத்தடிப்பதற்கான அல்லது இக் கோரிக்கையைத் தமிழர்களுக்குப் பாராபட்சமான முறையிலே நிறைவேற்றி வைப்பதற்கான தந்திரோபாயமோ என சிந்திக்க வேண்டியுள்ளது.

முன்பு நிர்வாக அலகுகளாக இருந்த பிரிவுக் காரியாதிகாரி முறைமை (D.R.O'S Division) க்குப் பதிலாக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஏற்படுத்தப்பெற்றபோது முழுக் கல்முனைத் தேர்தல் தொகுதியும் " கரவாகுப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவு" எனும் ஒற்றை நிர்வாக அலகாக உருவாக்கப்பெற்று இந்த ஒற்றை நிர்வாக அலகுக்குள் சாய்ந்தமருது, கல்முனைக்குடி, கல்முனை, பாண்டிருப்பு, மணற்சேனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, கிட்டங்கி, மருதமுனை, பெரியநீலாவணை ஆகிய கிராமங்கள் அடங்கியிருந்தன.

கல்முனைத் தமிழர்களை பொறுத்த வரை இந்த ஒற்றை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஏற்படுத்தப்பெற்ற காலத்திலிருந்தே இதனை கல்முனைத் தரவைப்பிள்ளையார் கோவில் வீதியைப் பிரிக்கும் எல்லையாக கொண்டு இரண்டு நிர்வாக அலகுகளாக (உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாகப்) பிரித்து கல்முனைக்குடி மற்றும் சாய்ந்தமருது கிராமங்களை உள்ளடக்கிய தெற்குப்பகுதியை கரவாகு தெற்கு அல்லது கல்முனைத் தெற்கு எனும் பெயரில் முஸ்லீம் பெரும்பான்மை நிர்வாக அலகாகவும் (100% முஸ்லீம்) கல்முனை, பாண்டிருப்பு, மணற்சேனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, கிட்டங்கி, மருதமுனை, பெரியநீலாவணை கிராமங்களை உள்ளடக்கிய வடபகுதியை கரவாகு வடக்கு அல்லது கல்முனை வடக்கு எனும் பெயரில் தமிழ் பெரும்பான்மை அலகாகவும் (தமிழர்கள், முஸ்லீம்கள், சிங்களவர்கள் உள்ளடக்கியது) ஆக்கித்தரும்படி அவ்வப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கங்களிடமும் அரசாங்க உயர் அதிகாரிகளிடமும் தமிழர்தம் அரசியல் தலைமையான தமிழர் விடுதலைக்கூட்டணியிடமும் (தற்போது தமிழரசு கட்சியின் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பு) கோரிக்கை விடுத்துள்ளனர். உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பின்னர் பிரதேச செயலகப் பிரிவுகளாக தரமுயர்த்தபெற்றன அல்லது பெயர் மாற்றப்பெற்றன.

இது விடயமாக முன்னாள் உள்ளூர் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ண, முன்னால் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரர் . கே. டபிள்யூ. தேவநாயகம் , பொத்துவில் தொகுதியின் முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.ரங்கநாயகி பத்மநாதன் ஆகியோர் எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியின் விளைவாக 12.04.1989 தனியான தமிழ் பெரும்பான்மை உதவி அரசாங்கப் பிரிவு உப அலுவலகமாகத் திறக்கப்பெற்றும் பின்னர் 28.07.1993 ல் அமைச்சரவை தீர்மானத்தின்படி நாடளாவிய ரீதியில் பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பெற்ற 28 உப அலுவலகங்களுள் கல்முனைத் தமிழ் பிரிவும் அதாவது கல்முனை வடக்கு (தமிழ்) உள்ளடக்கப்பட்டது.

ஆனால் நாடளாவிய ரீதியில் தரமுயர்த்தப்பெற்ற 28 உப அலுவலகங்களுள் கல்முனை தமிழ் பிரிவு தவிர்ந்த ஏனைய 27 உப அலுவலகங்களும் நிறைவேற்றப்பெற்ற சமகாலத்தில் கல்முனை பிரதேசத்தை சேர்ந்த முஸ்லீம் அரசியல்வாதிகளினால் குறிப்பாக முஸ்லீம் காங்கிரஸ் முன்னால் தலைவர் அமரர். எம். எச் . எம் அஸ்ரப் அவர்களின் அரசியல் தலையீடு காரணமாக கல்முனை தமிழ் பிரிவு நிறைவேற்றப்பெறாமல் பின்னர் வந்த முஸ்லீம் அரசியல்வாதிகளின் விருப்பமின்மை காரணமாக இன்று வரை உப அலுவலகமாகவே வெறுமனே கல்முனை வடக்கு (தமிழ்) பிரதேச செயலகம் எனும் பெயர்ப்பலகை மட்டும் மாட்டிக் கொண்டு இயங்கி வருகின்றது.

கடந்த முப்பது வருட காலமாகக் கல்முனைத் தமிழ்ப்பிரிவு விடயம் கிடப்பில் போடப்பட்ட சமகாலத்தில், முஸ்லிம் பெரும்பான்மை சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து பிரித்தெடுக்கப் பெற்று புதிதாகத் தனியான இன்னுமொரு முஸ்லிம் பெரும்பான்மை இறக்காமம் பிரிவும், அதேபோல் கரவாகு (கல்முனை ) உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து பிரித்தெடுக்கப்மபட்டு புதிதாக தனியான இன்னுமொரு முஸ்லிம் பெரும்பான்மை சாய்ந்தமருதுப் பிரிவும் இப்பிரதேச முஸ்லிம் அரசியல்வாதிகளின் முயற்சியாலும் செல்வாக்கினாலும் ஏற்படுத்தப்பட்டன.இவை அவர்களது தேவை. இதைக் குறைகூறத் தேவையில்லை.

இவை தேவை கருதியும் மக்களின் அபிலாஷை கருதியும் மக்களின் கோரிக்கையின் அடிப்படையிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் போது கல்முனைப் பிரதேசத் தமிழர்களின் நியாயமான கோரிக்கையான கல்முனைத் தமிழ்ப்பிரிவை தனியான தமிழ்ப் பெரும்பான்மைப் பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தத் தடை ஏன்? நியாயமான இக்கோரிக்கைக்கு இப்போது வயது 30 ஆகிறது.

எனவே, உத்தேச கல்முனை வடக்கு(தமிழ் ) பிரிவின் உருவாக்கம் அல்லது தரமுயர்த்தல் என்பது புதிதாக எடுத்த கோரிக்கை அல்ல என்பதுடன் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுவது போல இதனை நிறைவேற்றி வைப்பதில் நிலத்தொடர்பின்மைப் பிரச்சினையோ அல்லது எல்லைகள் மீள் நிர்ணயச் செயற்பாட்டுப் பிரச்சினையோ எதுவுமில்லை. இவை வேண்டுமென்றே இழுத்தடிப்பதற்காக அல்லது கல்முனைத் தமிழர்களுக்குப் பாதகமான வகையிலே நிறைவேற்றி வைப்பதற்காகச் செயற்படும் சக்திகளின் தந்திரோபாயம் ஆகும். இந்த விடயத்தில் தமிழர் தரப்பு கல்முனைப் பிரதேசத் தமிழர்கள் மிகவும் விழிப்பாகவும் நுட்பமாகவும் செயலாற்ற வேண்டியது அவசியம்.

மேலும், முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசப் பிரிவு என்பது 100% முஸ்லிம்களைக் கொண்டிருக்க வேண்டும் என்ற விதியோ தேவையோ இல்லை. அதேபோல் தமிழ்ப் பெரும்பான்மை பிரதேச செயலகப் பிரிவு என்பது 100% தமிழர்களைக் கொண்டிருக்க வேண்டும் என்ற விதியோ தேவையோ இல்லை. தற்போது நடைமுறையில் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் பெரும்பான்மை பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் வட்டிவெளி, குண்டுமடு, தாமரைக் குளம், இன்ஸ்பெக்டர் ஏத்தம், ஊறணி, கனகர் கிராமம், கோமாரி, சங்கமன்கண்டி போன்ற தமிழ்க் கிராமங்கள் அடங்கியுள்ளன.

அதேபோல் முஸ்லிம் பெரும்பான்மை அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் திராய்க்கேணி எனும் தமிழ்க் கிராமம் அடங்கியுள்ளது. அதேபோல் நிந்தவூர்ப் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் அட்டப்பள்ளம் எனும் பழந்தமிழ்க்கிராமம் அடங்கியுள்ளது.

அதேபோல் முஸ்லிம் பெரும்பான்மை சம்மாந்துறைப் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் வீரமுனை, மல்வத்தை, கலைதி நகர் புதுநகர், வளத்தாப்பிட்டி, மல்லிகைத்தீவு போன்ற தமிழ்க்கிராமங்கள் அடங்கியுள்ளன.

மறுதலையாக தமிழ்ப் பெரும்பான்மை காரைதீவுப் பிரதேச செயலகப்பிரிவின் கீழ் மாவடிப்பள்ளி எனும் முஸ்லிம் கிராமம் உள்ளது. தமிழ்ப் பெரும்பான்மை நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் கணிசமான முஸ்லிம்களும் வாழ்கிறார்கள். அதுமட்டுமல்ல நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவு 2001 இல் ஏற்படுத்தப்படும் வரை இப்பிரதேசம் முஸ்லிம் பெரும்பான்மைச் சம்மாந்துறைப் பிரதேசப் பிரிவின் கீழேதான் நிர்வகிக்கப்பட்டது. 1989 இலிருந்து பார்த்தாலும் கடந்த 30 வருடமாக முஸ்லிம் பெரும்பான்மைக் கரவாகுப் பிரதேச செயலகப் பிரிவின் ஆளுகையின் கீழேதான் கல்முனை , பாண்டிருப்பு, மணற்சேனை, நற்பிட்டிமுனை, சேனைக் குடியிருப்பு , கிட்டங்கி , பெரிய நீலாவனை வாழ் தமிழர்கள் இருந்தனர். ஆனாலும் கல்முனைப் பிரதேசத் தமிழர்களுக்கென தனியானதொரு தமிழ்ப் பெரும்பான்மை நிர்வாக அலகை கடந்த 30 வருடகாலமாக அவர்கள் கோரி வருகிறார்கள் என்றால் அது அவர்களது சமூக , பொருளாதார , அரசியல் அபிலாசைகளை அடிப்படையாகக் கொண்டதே என்பதை முஸ்லிம் அரசியல்வாதிகள் உணராவிட்டாலும் கூட முஸ்லிம் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே உத்தேச கல்முனைத் தமிழ்ப் பிரிவின் கீழ் கல்முனை நகர், நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு , மருதமுனை வாழ் முஸ்லிம்கள் கணிசமான அளவில் அமைவது தவறற்றதும் தவிர்க்க முடியாததுமாகும். கரவாகு ( கல்முனை ) பிரதேச செயலகப் பிரிவிலிருந்து சாய்ந்தமருது தனியான பிரதேச செயலகப் பிரிவாக உருவானது நியாயம் என்றால், சம்மாந்துறைப் பிரதேச செயலகப் பிரிவிலிருந்து இறக்காமமும், நாவிதன்வெளியும் தனியான பிரதேச செயலகப் பிரிவுகளாக உருவானது நியாயம் என்றால் தற்போது நடைமுறையிலுள்ள கல்முனை பிரதேச செயலகப் பிரிவிலிருந்து மேற்கூறப்பட்டவாறு கல்முனைத் தரவைப் பிள்ளையார் வீதியைப் பிரிக்கும் எல்லையாகக் கொண்டு அதன் வட பகுதி தனியான பிரதேச செயலகப் பிரிவாக (கல்முனை வடக்கு தமிழ்ப் பிரிவு ) உருவாவதும் நியாயம்தானே. இதில் நிலத்தொடர்பின்மைப் பிரச்சினையோ எல்லை மீள் நிர்ணயச் செயற்பாட்டுப் பிரச்சினையோ எழ நியாயமில்லை.

28.07.1993 அமைச்சரவைத் தீர்மானத்தின் அமுலாக்கமே இன்றும் வேண்டப்படுவதாகும்.

# மட்டு மாநகர சபை

## உள்ளூராட்சி மன்றங்களில் பொதுமக்களின் குறைகளைக் கேட்டல்

அன்பழகன் குரூஸ் (JP) M.A, P.G.Dip in Edu, Dip in LG.
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்



ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களிலும் பொதுமக்களின் குறைகளை அறிவதற்காக 'பொதுமக்கள் குறைகேள் பொறிமுறை' எனும் பெயரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உங்களுடைய உள்ளூராட்சி மன்றமானது மாநகர சபையாக அல்லது நகரசபையாக அல்லது பிரதேச சபையாக இருக்கலாம். எதுவாயினும் அங்கே அதன் அலுவலக முகப்பில் ஒரு பொதுமக்கள் தொடர்பாடல் உத்தியோகத்தர் வீற்றிருப்பார். அவரது பணி பொதுமக்களின் முறைப்பாடுகளை பெற்று அதற்கான தீர்வுகள் காண்பதாகும்.

உங்களது கிராமத்தில் உள்ளூராட்சி மன்றம் வழங்குகிற சேவைகள் தொடர்பாக ஒரு வேண்டுகோள் அல்லது ஆலோசனை அல்லது முறைப்பாடு உங்களிடம் இருக்கலாம். அதனை நீங்கள் உடனுக்குடன் தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்படுகின்றது. அதனை நிவர்த்தி செய்வதற்காகவும், அவை தொடர்பான மேலதிக முன்னேற்றத்திற்காகவும் இந்தப் பொறிமுறை ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக நீங்கள் பயன்படுத்தும் வீதியில் மதகு ஒன்று உடைந்திருக்கலாம். அதனை நீங்கள் உடனடியாகத் தெரிவிக்க முடியும்.

உங்களுடைய முறைப்பாடுகளை நீங்கள் எழுத்து மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம். அவ்வாறு சமர்ப்பிக்கும் போதும் அந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு பெறப்பட்டதற்கான பற்றுச்சீட்டும் வழங்கப்படும். அந்த முறைப்பாடுகளை வகைப்படுத்தி உரிய அதிகாரியிடம் கையளித்து அதனை உரிய காலத்தில் தீர்ப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படும்.

ஒரு கிராமத்தில் காணப்படுகின்ற சில குறைபாடுகளை உள்ளூராட்சி மன்ற உத்தியோகஸ்தர்களும் மக்கள் பிரதிநிதிகளும் உடனுக்குடன் நேரடியாக அவதானிக்க முடிவதில்லை. இதனை மக்கள் அறிந்து தெரிவிக்கிறபோது, அது அவர்கள் சேவையாற்ற இலகுவான வழியமைத்துக் கொடுப்பதுடன், மேலதிக விரையத்தினையும் தவிர்க்க முடிகின்றது.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்துதலும் தமிழ் முஸ்லிம் மக்களின் உறவும்

கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்துதல் எனும் விடயம் இன்று அரசியல்வாதிகளிடத்திலும் பொதுமக்களிடத்திலும் பேசுபொருளாக இருக்கின்றது. இவ்வருடம் இது ஏன் முக்கியப்படுத்தப்படுகின்றது என நோக்குவோமாக இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யுத்தம் முடிந்து இந்த 10 வருடங்களில் கிழக்குத் தமிழர்களின் மிகச் சிறிய இந்தக் கோரிக்கையினைத் தானும் நிறைவேற்றிக் கொடுக்க முடியாத வக்கற்ற நிலையிலேயே உள்ளது. இதன் காரணத்தினாலும் கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றியீட்டி அதனை முஸ்லிம்களுக்கு எந்தவித நிபந்தனையுமின்றி தாரைவார்த்துக் கொடுத்ததன் காரணத்தினாலும் கூட்டமைப்புக் குறித்த அதிருப்தி கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இதனை கடைசியாக நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வெளிப்படுத்தியிருந்தது. இந்த தேர்தல் சரிவை நிமிர்த்தி இம்முறையும் தங்களை தகவமைத்துக் கொள்வதற்கான ஒரு உத்தியாக கிழக்கைச் சேர்ந்த கூட்டமைப்பு உறுப்பினர்களும் விசுவாசிகளும் இவ்விடயத்தினை பேசுகின்றார்களே தவிர கூட்டமைப்பின் தலைப்பீடமான சம்மந்தரோ அல்லது சுமந்திரனோ எதுவும் பேசவில்லை. மாவை மாத்திரம் இதனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் பேசித் தீர்த்துக்கொள்வதாகக் கூறியுள்ளார். யார் என்ன பேசினாலும் தங்களுடைய சுயநல அரசியலுக்கும் மேலாதிக்கவாதத்திற்கும் பங்கம் ஏற்படாமல் சம்பந்தர், ரணில், ஹக்கீம் எனும் முக்கூட்டு செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது இதனையே கடந்த வருடமும் இவ்வருடமும் ரணிலைக் காப்பாற்றியதன் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை தமிழ் மக்கள் கவனிக்க வேண்டும்.

இந்த நிலையில் அரசியல்வாதிகளின் அலங்கார வார்த்தைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு இவ்விடயம் தொடர்பாக தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் அந்த மக்களுடைய சமூக மட்ட அமைப்புகளும் இவ்விடயம் தொடர்பாக சமூகப்பொறுப்புடன் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

இலங்கையின் பல்லின சமூக வாழ்க்கைக்கு கிழக்கு மாகாணம் சிறந்த உதாரணமாகும். இச்சமூகங்களின் உரிமையினையும் இருப்பையும் அபிவிருத்தியினையும் அரசியல் அபிலாசைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய அரசியல் நிர்வாக முறைக் கட்டமைப்பு என்பது இலங்கையின் நீடித்த இன முரண்பாட்டுக்கான தீர்வின் வகைமாதிரியாக அமையலாம். இதுவரை காலமும் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் முன்வைக்கப்பட்ட அரசியல் நிர்வாகக் கட்டமைப்புக்கள் கோட்பாட்டின் அடிப்படையில் புரிந்து கொள்ளப்பட்டதும் உலகின் பிற நாடுகளின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு மேலிருந்து திணிக்கப்பட்டதாக இருக்க, கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த சமூக அரசியல், பொருளாதார புவியியல் தன்மைக்கேற்ப மக்களையும் அம் மக்களுடைய பிரச்சினைகளையும் அடிப்படையாகக் கொண்டு அடையப்பெறும் அரசியல் நிர்வாக கட்டமைப்பு கீழிருந்து மேல்நோக்கிப் பயணிப்பதாக இருக்கும். இவ்வகைப்பட்ட முறையானது மக்களிடமிருந்து மக்களுக்கானதாக அமையப்பெறும்.

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துதல் எனும் விடயம் மேற்கூறப்பட்ட அரசியல், நிர்வாக முறைக் கட்டமைப்பின் பரிசோதனைக் களமாக இருக்கின்றது. 30 வருடங்களுக்கு முன்பு உருவாக்கப்பட்ட 28 உப பிரதேச செயலகங்களில் 27 தரமுயர்த்தப்பட்டு பூரணமான பிரதேச செயலகங்களாக செயற்பட்டுக் கொண்டிருக்க இது மாத்திரமே இன்னும் தரமுயர்த்தப்படாமல் இருப்பதற்கான அரசியல் முடிச்சை மக்கள் இனம் காண வேண்டியது அவசியமாகும்.

தமிழ்த் தலைவர்கள் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையினை லெனின் வகுத்த ஜனநாயகத் தன்மையின் அடிப்படையில் புரிந்து கொண்டு செயற்பட்டார்கள் என்று கூறுவதற்கில்லை. ஏனெனில் தாங்கள் கூறிய சுயநிர்ணயத்தினை தங்களுக்குள் மொழிவழியாக ஒன்றாக இருக்கும் முஸ்லிம்களுக்கு வழங்க மறுத்ததோடு தங்களின் மேலாண்மைக்குள் முஸ்லிம்களை கட்டுப்படுத்த முனைந்ததன் விளைவுகளே தமிழ் - முஸ்லீம் முரண்பாட்டுக்கான காரணம் எனக் கூறமுடியும்.

உதாரணமாக 50:50 கேட்ட ஜி.ஜி. பொன்னம்பலம் சிறுபான்மையினருக்கான 50 வீதத்தில் முஸ்லிம்களின் சனத்தொகை வீதத்துக்கேற்ப அதனை பங்கிட மறுத்திருந்தார். எஸ்.ஜே.வி.செல்வநாயகமும் அவர்களுடைய வாரிசுகளும் தமிழ்பேசும் மக்கள் என்ற கருத்தாக்கத்தினுள் முஸ்லிம்களைக் கொண்டு வந்து தங்களின் மேலாண்மைக்கான சூட்சுமத்தினை வைத்திருந்தார்கள். பிற்பட்ட காலங்களில் தோன்றிய விடுதலை இயக்கங்களும் முஸ்லிம் மக்களின் அரசியல் நிர்வாக கட்டமைப்புத் தொடர்பாக தெளிவற்றவர்களாகவே இருந்தனர். இந்தத் தெளிவின்மையை சரியாகப் புரிந்து கொண்ட சிங்கள அரசு முஸ்லீம்களுக்கும் தமிழர்களுக்கும் முரண்பாட்டை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டது.

இந்த வரலாற்று அனுபவம் முஸ்லிம்களை பின்வரும் இரு விடயங்கள் தொடர்பான கவனக்குவிப்புக்கு உள்ளாக்கியது.

1. தங்களை தனியான இனமாகக் கட்டமைத்தல்

2. இரு இனங்களின் போராட்டத்தில் சந்தர்ப்பவாத அரசியலைக் கைக்கொள்ளுதல்.

தமிழர்களும் சிங்களவர்களும் தங்களை தமிழ் சிங்கள தேசிய இனங்கள் என்று கூறும்போது முஸ்லீம்கள் தங்களை ஒரு தேசிய இனம் என்று கூறுவதில் சிக்கலை எதிர்கொண்டார்கள். காரணம் அவர்களுக்கான மொழியும் பாரம்பரிய நிலத் தொடர்ச்சியும் இல்லாமையினாலாகும். இதன் காரணத்தினால் தங்களுடைய அடையாளத்தினை இஸ்லாம் மதத்தினை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கத் தொடங்கினார்கள். 1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாக மத்திய கிழக்கு நாடுகளுக்கிடையிலான ஊடாட்டம் இதனை ஊக்குவித்தது. இந்த மத அடையாளக் கட்டுமானத்தில் அடிப்படைவாதம் கடுமையான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. 1980களுக்கு முன்பு இல்லாத மதக்கட்டுப்பாடுகளும் ஒழுக்கங்களும் இவற்றை அடிப்படையாகக் கொண்ட அவர்களின் பண்பாட்டு நடத்தைகளும் குறிப்பாக தமிழர்களின் வழிபாட்டு முறைகள், பழக்கவழக்கம் பண்பாடு என்பவற்றை இழிவானதாகவும் தரங்கெட்டதாகவும் ஒதுக்கப்பட வேண்டியனவாகவும் நோக்கி இஸ்லாத்தை புனிதமானதாகவும் தூய்மையானதாகவும் தரமானதாகவும் முன்வைக்கின்றது இது தமிழர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது.

1980களுக்கு முன்பு தமிழ் கிராமங்களில் எல்லாம் முஸ்லீம்கள் தேனீர்க் கடைகளையும் மளிகைக் கடைகளையும் நடாத்தி வந்தார்கள். அவ்வப்போது தமிழர்களின் காணிகளையும் வாங்கிக் கொண்டார்கள். தமிழர் முஸ்லிம்கள் என்ற வேறுபாடின்றி வயல்களில் வேலை செய்தார்கள் ஆனால் இன்று தமிழர் பகுதிகளில் முஸ்லிம்கள் காணி வாங்குவதை ஆக்கிரமிப்பின் வடிவமாகத் தமிழர்கள் நோக்குகின்றார்கள் சிங்களவர்களும் இவ்வாறே நோக்குகின்றனர்.

இந்த மதஅடையாளக் கட்டமைப்புக்கு ஏற்ற வண்ணம் அரசியலையும் அவர்கள் கையாளத் தொடங்கினார்கள். தமிழர்கள் தங்களுக்கான தேசம், சுயநிர்ணயம் என்பவற்றுக்காக அகிம்சைப் போராட்டத்திலும் ஆயுதப் போராட்டத்திலும் பல தியாகங்களைச் செய்து போராடி எதுவுமற்ற நிலையில் இருக்கிறார்கள். யுத்தம் முடிந்த பின்பு ஏற்பட்ட ஜனநாயக அரசியல் வெளியிலும் தங்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள், அபிவிருத்திகள் தமிழ் அரசியல் தலைமைகளின் அரசியல் சாணக்கியமின்மையால் கிடைக்கப்பெறாத சூழ்நிலையில் இவை எல்லாவற்றையும் அதாவது யுத்தம் இடம்பெற்றபோதும் யுத்தம் முடிந்த பின்பும் தமிழ் மக்களின் போராட்டப் பலனை அனுபவிப்பவர்களாக முஸ்லிம்கள் இருக்கிறார்கள். இது முஸ்லிம்களின் தவறு அல்ல என்பதையும் அறிவார்கள் இருந்த போதும் தங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியவற்றை தங்களுடைய அரசியல் பலத்தினாலும் சாணக்கியத்தினாலும் தட்டிப்பறிப்பதைத்தான் தமிழர்கள் எதிர்க்கிறார்கள்.

இந்த இரு காரணங்களாலும் தமிழர்கள் முஸ்லிம்கள் மீது வெறுப்பும் தமிழ்த் தலைவர்கள் மீது விரக்தியும் கொண்டுள்ளனர். இதனால் முஸ்லிம்களை எதிர்பதற்கு சிங்கள இனவாதத் தலைவர்களிடத்திலும் மதகுருமார் இடத்திலும் தஞ்சடைய வேண்டிய நிலைக்கு தமிழர்கள் தள்ளப்படுகின்றார்கள். இது இரு சிறுபான்மையினங்களுக்கும் ஆரோக்கியமானதல்ல என்பதை இரு சிறுபான்மையினரும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இது 1990களில் தமிழர்களை எதிர்க்க முஸ்லிம்கள் சிங்கள அதிகாரத்துவத்திடம் சரணடைந்தபோது ஏற்பட்ட ஒரு நிலையினை உருவாக்கலாம் என்பதை மறக்கக்கூடாது.

எனவே முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் அச்சங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டும் அதே போல் தமிழ் மக்கள் முஸ்லிம் மக்களின் நியாயமான கோரிக்கைகள் அவர்களுக்கு தமிழர்கள் மேல் இருக்கும் அச்சங்கள் என்பவை தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு கவனம் கொள்கின்றபோது அந்தத்த இனங்கள் தங்களின் அடையாளங்களாகக் கொண்டிருக்கின்ற சிறப்பம்சங்களை பாதுகாப்பதும் அவற்றினைப் பேணுவதிலும் ஒரு சமூகம் மற்றைய சமூகத்தில் மேலாண்மை பண்ணக்கூடாது என்கின்ற புரிந்துணர்வும் நம்பிக்கையும் முக்கியமானதாகும்.

இந்த நம்பிக்கையும் புரிந்துணர்வும் அம்பாரை மாவட்டத்தில் முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளச்சேனை, இறக்காமம், நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை தெற்கு போன்ற முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் தமிழர்களுக்கு இருக்கின்றது. அதே போல் தமிழர்கள் பெரும்பான்மையாகக் கொண்ட திருக்கோயில், ஆலையடிவேம்பு, காரைதீவு, நாவிதன்வெளி, போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளில் முஸ்லிம்களுக்கு இருக்கின்றது. இவை எதுவுமே நிலத்தொடர்பு அற்ற பிரதேசங்களுமாகும்.

நிலைமை இவ்வாறு இருக்கும் போது கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவை மாத்திரம் நிலத்தொடர்பு அடிப்படையில் எல்லை மீள் நிர்ணயம் செய்யப்பட்ட பின் தரமுயர்த்துவது என்கின்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஹக்கீம் அவர்களின் கூற்று எந்த அடிப்படையிலும் நியாயமானது அல்ல என்பது தமிழ் மக்களின் நிலைப்பாடாகும். கல்முனை தமிழ் பிரதேசத்தினுள் உள்ளடங்கும் முஸ்லிம் மக்களின் நியாயமான பிரச்சினைகளை அவர் ஒளிவு மறைவின்றி தெளிவுபடுத்த வேண்டும் என தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**எழுவான் வேலன்**

எனவே தமிழ் மக்கள் அரசியல்வாதிகள் தமக்கான உரிமையினைப் பெற்றுத்தருவார்கள் என்பதை எதிர்பார்க்காமல் சமூகமட்ட அமைப்புக்களின் மூலம் இந்தப் பிரதேச முஸ்லிம் மக்களுடன் பேசி ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஐயங்களை பிரச்சினைகளை திறந்த மனதுடன் கலந்துரையாடி தீர்வினை அவர்களாகப் பெற்றுக் கொள்வார்களாக இருந்தால் மேலே குறிப்பிட்டபடி இந்தவகையிலான தீர்வினை அல்லது அரசியல் நிர்வாகக் கட்டமைப்பை முழு இலங்கைக்குமான மாதிரியாகக் கொள்ள முடியும். இதனைச் செய்வதற்கு இப்பிரதேச இரு இனங்களும் முன்வருதல் காலத்தின் கட்டாயம் ஆகும். இது செய்யப்படாமல் விடுபட்டால் அரசியல்வாதிகள் பகையை மூட்டி இலாபத்தை அறுவடை செய்வதற்கு பலிகொடுக்கப்போவது சாதாரண பொதுமக்களையேயாகும்.



# ஐநா மனித உரிமை பேரவையில் அடுத்த வருடாந்த சடங்கு!

இரா.துரைரத்தினம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு கடும்நெருக்கடி, ஆபத்து என சில தமிழ் இணையத்தளங்களும் பத்திரிகைகளும் வெளியிடும் செய்திகளை பார்க்கும் பாமர மக்கள் ஐ.நா.சபை இலங்கை அரசின் செவியை பிடித்து இழுத்து சென்று இருத்தி வைத்து, தான் சொல்வதை எல்லாம் செய்விக்கப்போகிறது, இலங்கைக்கு தண்டனை கிடைக்கப்போகிறது என எண்ணக் கூடும்.

இலங்கையில் உள்ள தமிழ் மக்களை ஒரு மாயை நிலையில் வைத்திருக்கத்தான் தமிழ் அரசியல்வாதிகளும் அரசசார்பற்ற நிறுவனங்களும் விரும்புகின்றன.

இலங்கைக்கு கால அவகாசம் கொடுக்க வேண்டும் என ஒரு தரப்பும், கால அவகாசம் கொடுக்க கூடாது என ஒரு தரப்பும் தங்களுக்குள் முரண்பட்டு அவன் துரோகி இவன் துரோகி என முட்டி மோதிக்கொண்டிருக்கிறார்களே ஒழிய அனைவரும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்து ஒரே கோரிக்கையை ஐ.நா.மனித உரிமைப் பேரவைக்கும் அதன் அங்கத்துவ நாடுகளுக்கும் கொடுக்க தயாராக இல்லை. அனைவரும் தங்கள் அரசியல் நலனையும் வாக்கு வங்கியையும் இலக்கு வைத்து செயற்படுகிறார்களே ஒழிய தமிழ் மக்களின் நலன்களில் அக்கறையோடு செயற்படுவதாக தெரியவில்லை.

தமிழ் மக்களின் வாக்குகளின் மூலம் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அதன் தலைமையும் தம்மை தெரிவு செய்த மக்களின் விருப்பங்களை பிரிதிபலிப்பதாக தெரியவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்கள் தனக்கான சொந்த சலுகைகளை பெறுவதில் காட்டும் அக்கறை பாதிக்கப்பட்ட மக்கள் மீது காட்டவில்லை என்பது வெளிப்படையான உண்மை.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான கோரிக்கைகளை நிபந்தனைகளாக முன்வைத்து அரசுக்கு ஆதரவளிப்பதாகவும் தெரியவில்லை. தனியே தமக்கான சலுகைகளை எதிர்பார்த்தே ஆதரவளிப்பதாக மக்கள் மத்தியில் குற்றச்சாட்டுக்கள் எழுந்து வருகின்றன.

அண்மையில் கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்த வேண்டும் இல்லையேல் வரவு செலவு திட்டத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாக வாக்களிக்க கூடாது என்ற கோரிக்கை மட்டக்களப்பு அம்பாறை பிரதேச தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த கோரிக்கையை நிராகரித்து விட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறது. ஆதரவாக வாக்களித்ததற்கு ஆயிரம் காரணங்களை சொன்னாலும் இந்த கோரிக்கையை முன்வைத்த தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. தங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏமாற்றிவிட்டது, தங்களை கைவிட்டு விட்டது என்ற கோபம் நிச்சயம் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களில் எதிர்வரும் தேர்தல்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும்.

அது தவிர சிறிலங்கா அரசை காப்பாற்றும் வகையிலேயே ஐ.நா.மனித உரிமை பேரவை விடயங்களிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு செயற்படுவதாக தமிழ் மக்கள் மத்தியில் பரவலான குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் ரெலோ உட்பட ஐந்து தமிழ் கட்சிகள் சிறிலங்காவுக்கு கால அவகாசம் வழங்கக் கூடாது என கூட்டாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும் அதேவேளை கால அவகாசம் வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தமிழரசுக்கட்சியினர் உள்ளனர்.

தமிழ் கட்சிகள் அனைத்தும் வெறும் பத்திரிகை அறிக்கைகளும் மேடைப்பேச்சுக்களுமாக உள்ளனரே தவிர தமிழ் அரசியல் தலைமைகளை ஒன்றுபடுத்தி ஒரே கருத்துடன் சர்வதேச சமூகத்தை அணுகும் போக்கு அவர்களிடம் அறவே கிடையாது.

வடமாகாணசபை இயங்கிய காலத்தில் 400க்கு மேற்பட்ட தீர்மானங்கள் அச்சபையில் நிறைவேற்றப்பட்டன.

தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டது இனப் படுகொலை என்றும், போர்க்குற்ற விசாரணைக்கு சர்வதேச நீதிப் பொறிமுறை அவசியம் என்றும் வடமாகாண சபையில் இரண்டு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தன.

அந்தத் தீர்மானங்களை முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் இதுவரை ஜெனீவா மனித உரிமைச் சபைக்கு அனுப்பி வைக்கவில்லை என கொழும்பில் உள்ள மூத்த ஊடகவியலாளர் அ.நிக்சன் தனது கட்டுரை ஒன்றில் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தார்.

தீர்மானங்களை நிறைவேற்றி தமிழ் பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்துவிட்டால் போதும் என்ற நிலைப்பாட்டிலேயே முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் உட்பட பெரும்பாலான அரசியல்வாதிகள் உள்ளனர்.

இந்நிலையில் தான் இலங்கையிலிருந்து ஜனாதிபதி அணி, பிரதமர் அணி என இரு அணிகளும் மகிந்த சார்பு அணிகளும், தமிழர் தரப்பில் தமிழரசுக்கட்சி, ரெலோ, அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் என பல கட்சிகளின் பிரதிநிதிகளும், சில அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் ஐரோப்பா கனடா அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும், தமிழ் நாட்டிலிருந்து சிலரும் ஜெனிவாவில் முகாமிட்டிருக்கின்றனர்.

இதில் இன்னொரு நகைப்புக்கிடமான வேடிக்கை என்ன வென்றால் ஜனாதிபதியின் பிரதிநிதியாக செல்லும் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனிடம் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் சிலரும் தமிழர் தரப்பை சேர்ந்த சிலரும் தமது கோரிக்கைகளை ஐ.நா.மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்குமாறு கையளித்திருக்கிறார்கள்.

போர்க்குற்ற விசாரணையை நடத்த மாட்டேன், போரில் ஈடுபட்ட படையினரை தண்டிக்க அனுமதிக்க மாட்டேன், ஐ.நா.மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை கணக்கில் எடுக்க மாட்டேன் என சிங்கள பேரினவாத சிந்தனையுடன் பேசிவரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் பிரதிநிதியாக செல்லும் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தமிழர்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை ஐ.நா.மனித உரிமை பேரவையில் கையளிப்பாரா?

போர்க்குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தி போர்க்குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கிய மகஜரையே முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்கள் வடக்கு ஆளுநரிடம் கையளித்திருக்கிறார்கள்.

ஜனாதிபதியின் பிரதிநிதி இந்த மகஜரை ஐ.நா.மனித உரிமை பேரவையில் சமர்ப்பிப்பார் என எண்ணுவது எவ்வளவு பெரிய நகைப்புக்கிடமான விடயம்.

இவ்வேளையில் தமிழர் தரப்பும் ஐ.நா. மனித உரிமை பேரவை ஊடாக கேட்டது கிடைத்துவிடும் என்ற மாயையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

ஜெனிவாவுக்கு போய் பேசி சாதித்து விட்டு வந்தோம் என தற்பெருமை பேசும் தமிழ் அரசியல்வாதிகளைத்தான் நாம் அதிகம் காண்கிறோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு இருக்கும் அதிகாரம் என்ன, ஒரு நாட்டை தண்டிக்கும் அல்லது இதை செய் என உத்தரவு போடும் அதிகாரம் உண்டா? என்பதை சிலர் விளங்கிக்கொள்வதில்லை.

இலங்கைக்கு அழுத்தம் கொடுங்கள், உறுதியான முடிவுகளை எடுங்கள் என ஐ.நா.மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகளிடம் ஐ.நா.மனித உரிமை ஆணையாளரால் வேண்டுகோள் விடுக்க முடியுமே அன்றி எந்த ஒரு நாட்டிற்கும் உத்தரவு போடும் அதிகாரம் ஆணையாளருக்கு கிடையாது.

அங்கத்துவ நாடுகள் தான் எந்த முடிவையும் எடுக்கும் அதிகாரங்களை கொண்டிருக்கின்றன. இலங்கையை பகைத்துக்கொள்ள எந்த நாடும் முன்வரப்போவதில்லை. உதாரணமாக பிரித்தானியா இலங்கையுடன் தொடர்ந்து நட்பு நாடாக செயற்பட விரும்புமே ஒழிய இலங்கை அரசை அவர்கள் பகைத்து கொள்ள தயாராக இல்லை. அதேபோலத்தான் ஏனைய ஐரோப்பிய மற்றும் கனடா அவுஸ்ரேலிய போன்ற நாடுகள் செயற்படுகின்றன.

சீனா, ரஷ்யா, இந்தியா பாகிஸ்தான் போன்ற நாடுகள் முழுக்க முழுக்க இலங்கை யை காப்பாற்றுவதற்கே கங்கணம் கட்டி செயற்பட்டு வருகின்றன.

உதாரணமாக ஐ.நா.மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்தவில்லை என்றால் அங்கத்துவ நாடுகள் இலங்கை மீது பொருளாதார தடையை விதியுங்கள் என வேண்டுகோள் விடுக்கலாமே ஒழிய பொருளாதார தடையை விதித்து இலங்கையை தண்டிக்கும் அதிகாரம் ஐ.நா.மனித உரிமை ஆணையாளருக்கு கிடையாது.

ஐ.நா.மனித உரிமை பேரவையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் எவையும் இலங்கை மீது பொருளாதார தடையை விதிப்பதற்கோ அல்லது இலங்கையை சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றில் நிறுத்துவதற்கோ தயார் இல்லை என்பதுதான் யதார்த்தம்.

அண்மையில் ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையில் கூட ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வழங்கிய உறுதிமொழிகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்கு இலங்கை தவறியுள்ளது. இதற்காக இலங்கை மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் அங்கத்துவ நாடுகளைத்தான் கோரியிருந்தாரே ஒழிய ஐ.நா.மனித உரிமை பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாது நான்கு வருடங்களான ஏமாற்றிய இலங்கை அரசாங்கத்திற்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும் என்றோ இலங்கை மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றோ குறிப்பிடவில்லை.

ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை மீதான விவாதம் நடைபெற உள்ளதுடன் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 40ஆவது கூட்டத்தொடரில் நிறைவேற்றுவதற்கான சிறிலங்கா தொடர்பான தீர்மானத்தின் வரைவை, பிரித்தானியாவும், ஜேர்மனியும் கடந்த திங்கட்கிழமை அதிகாரபூர்வமாக ஐ.நா மனித உரிமைகள் பேரவைச் செயலகத்தில் சமர்ப்பித்துள்ளன.

'சிறிலங்காவில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்' என்ற தலைப்பிலான இந்த தீர்மான வரைவில், 2015ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, சிறிலங்கா அரசாங்கத்துக்கு, மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் அளிக்கப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடக்கவுள்ள பேரவையின் 43 ஆவது கூட்டத்தொடரில், ஐ.நா மனித உரிமை ஆணையாளரினால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ள இந்த வரைவில், 2021 மார்ச் மாதம், விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்த சிறிலங்கா எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பாராட்டும் இந்த வரைவில், 30/1 தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஐ.நா.மனித உரிமை பேரவை தீர்மானத்தை தான் நடைமுறைப்படுத்தப்போவதில்லை என ஜனாதிபதி திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறார்.

2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எதனையும் நடைமுறைப்படுத்தாது கடந்த நான்கு ஆண்டுகளாக உதாசீனம் செய்து வரும் சிறிலங்கா அரசாங்கம் இக்கூட்டத்தொடரில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை இரண்டு வருடங்களில் நிறைவேற்றும் என தமிழர் தரப்பு யாராவது நம்பினால் அதனைப் போன்ற முட்டாள் தனம் வேறு எதுவும் இருக்க முடியாது.


ஐ.நா.மனித உரிமை பேரவையால் தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என தமிழர் தரப்பு நம்பிக்கொண்டிருப்பதுதான் பெரும் சோகம்.



# பட்டறிவு

## சிங்கக் கொடி, சிங்களக் கொடி, தேசியக் கொடி!?

என்.சரவணன்



"பி.ப 4 மணி. கண்டி பிரதானிகள், திசாவ, அதிகாரி ஆகியோர் கூடியிருந்த \மகுல் மடுவ' வில் கண்டி ஒப்பந்த பிரகடனத்தை தேசாதிபதி வாசித்தார். அதன் பின் அரச மரியாதையுடன் ராஜரீக கொடி ஏற்றப்பட்டது. அளவான வெப்பமுள்ள நாள், தெளிவான வானம்...."

கண்டி வீழ்ச்சியின் சூத்திரதாரி ஜோன் டொயிலியின் டயரியில் மார்ச் 2. 1815 ஆம் திகதி இப்படித்தான் எழுதப்பட்டிருந்தது.

ஆனால் அதே தினம் வாரியபொல சுமங்கள தேரர் அந்த கொடிக்கம்பத்தில் ஏற்றப்பட்ட ஆங்கிலேயர்களின் கொடியை இறக்கி, காலால் மிதித்து, சிங்கக் கொடியை ஏற்றியதாக பல்லாயிரக்கணக்கான சிங்கள கட்டுரைகளும், நூல்களும் பதிவு செய்து வந்திருக்கின்றன. பாடசாலை பாடப்புத்தங்களில் இன்றுவரை அப்படியொரு கதையே எழுதப்பட்டு வருகின்றது.

ஆனால் அப்படி ஒரு சம்பவம் நடக்கவே இல்லை என்று பிரபல மானுடவியலாளரான பேராசிரியர் கணநாத் ஒபேசேகர உள்ளிட்ட பலர் தமது ஆய்வுகளில் நிரூபித்துள்ளனர்.

டொயிலியோ அல்லது வேறெந்த ஆங்கில அறிஞர்களோ, அல்லது அதிகாரிகளோ கூட அன்றைய தினம் அப்படிப்பட்ட ஒரு சம்பவம் நிகழ்ந்ததாக எங்கும் குறிப்பிடவில்லை.

அப்படி ஒரு சிங்கக் கொடியை எற்றியிருந்தாலும் கூட அப்படியயான கொடி கண்டி ராஜ்ஜியத்தின் கொடியாக இருந்ததில்லை. கண்டி ராஜ்ஜியம் ஏழு பிரிவுகளாக நிர்வகிக்கப்பட்டிருந்தது. அவற்றுக்கென கொடிகளும் இருந்தன. அந்த ஏழில் ஒன்று "சத்கோறளை" எனப்படும் பிரதேசம் இன்றைய குருநாகல் பகுதியின் பெரும்பகுதியை உள்ளடக்கியது அது. சத் கோரளவின் கொடிதான் சிங்கக் கொடி. ராஜசிங்கனுக்கு எதிரான கிளர்ச்சி சத்கோரளையிலிருந்து தான் ஆரம்பித்தது எனலாம்.

கண்டி தலதா மாளிகை பகுதிக்குள் உள்ள அதே 'மகுல் மடுவ'வில் இன்றும் அந்தக் கொடிக்கம்பம் இருக்கிறது. இரு வருடங்களுக்கு முன் பிக்குமார்கள் தலைமையில் தேசியக் கொடியிலிருந்து பச்சை, செம்மஞ்சள் பகுதிகள் அகற்றப்பட்ட தூய சிங்கக் கொடியை போலிசாரோடு மல்லுக்கட்டிக்கொண்டு ஏற்றிய சம்பவத்தை நாம் மறந்திருக்கமாட்டோம். அந்தளவு வாளேந்திய சிங்கக் கொடி பற்றிய கற்பிதங்களும், புனிதப்படுத்தலும் நிறுவனமயப்பட்டுள்ளன.

இலங்கையில் புராதன அரண்மனை வாசல்களில் அமைக்கப்பட்டிருந்த சந்திரவட்டக்கற்களில் வரிசையாக செதுக்கப்பட்ட சிங்கங்களின் உருவங்கள் காணப்படுகிறன.

அதுமட்டுமன்றி ஏறத்தாழ 9ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கருதப்படும் மன்னர்கள் மலசலம் கழிக்க உருவாக்கப்பட்டிருந்த கற்களில் இருக்கும் சிற்ப வேலைப்பாடுகளிலும் சிங்கத்தைக் காண முடிகிறது.

இலங்கையில் சிங்கள சாதியமைப்பில் மேனிலையில் இருந்த சாதிகளுக்கென்று தனித் தனியான கொடிகள் இருந்திருக்கின்றன. கராவ (மீன்பிடி



கரையார் சாதிக்கு ஒப்பானவர்கள்) சாதியினர் சிங்கத்தை தமது கொடியில் வைத்திருந்திருக்கின்றனர்.

இவர்கள் எல்லோரும் அப்படி அவர்கள் நம்புமளவுக்கு அந்த சிங்கக் கொடி தான் கடைசி கண்டி கொடியா?

இலங்கைக்கு விஜயன் வந்தபோது சிங்கக் கொடியுடன் தான் இலங்கையில் கால் பதித்தான் என்று ஒரு கதை சொல்லப்பட்டு வருகிறது. மகாவம்சத்திலும் சூளவம்சத்திலும் அப்படி இருப்பதாகவும் கதைகள் பரப்பப்பட்டுவருகின்றன. விஜயனின் தகப்பன் சிங்கபாகு சிங்கத்துக்குப் பிறந்ததாகக் கூறும் மகாவம்சக் கதையின் தொடர்ச்சியாகவே இப்படிப் புனைய நேரிட்டிருப்பதாகக் கொள்ள முடியும்.

அதுபோல எல்லாளனுடன் துட்டகைமுனு போர்புரிந்தபோது துட்டகைமுனு சிங்கக் கொடியுடன்தான் சென்றதாகவும் மகாவம்சம் கூறுவதாக சொல்வதும் சுத்தப் பொய். பிற்காலத்தில் வரையப்பட்ட அப்படியொரு சுவரோவியத்தைக் காட்டுவதைத் தவிர வேறெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. 18ஆம் நூற்றாண்டில் மன்னர் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் ஆட்சியின் போது வரையப்பட்ட தம்புல்லையில் உள்ள குகை ஓவியத்தில் ஒன்றே எல்லாளன் - துட்டகைமுனு போரை சித்திரிக்கிறது. இலங்கையின் தொல்பொருள் ஆய்வின் வித்தகராக போற்றப்படும் பரணவிதான எழுதிய "சிங்ஹலயோ" என்கிற நூலில்தான் அந்த ஓவியத்தை ஒரு கோட்டுச் சித்திரமாக வெளியிட்டிருந்தார். ஆனால் அந்தச் சித்திரத்தில் கொடியில் இருந்த உருவத்தை வெறுமையாக விட்டார். அந்த உருவம் தெளிவாக இல்லாததால் அவர் அதை வெறுமையாக விட்டிருக்கக் கூடும்.

ஆனால் ஈ.டபிள்யு பெரேரா கொடிகள் பற்றி எழுதி வெளியிட்ட நூலில் இந்தக் கொடியில் இருப்பது சிங்கம் தானென்றும் சிங்கத்தின் வலது கையில் வாளொன்றையும் உருவகப்படுத்தி புனைந்து வெளியிட்டார். இலங்கையின் தேசியக் கொடியைக் கண்டுபிடித்துக்கொண்டு வந்ததாக கூறி அதனை வெளியிட்டதும் அவர் தான். வாளேந்திய அந்தக் கொடியே, தான் கண்டு பிடித்த தேசியக்கொடி என்பதை உறுதிப்படுத்த அவர் இந்த "துட்டகைமுனுவின் சிங்கக் கொடி புனைவில்" இறங்கியிருக்கக் கூடும்.

இந்த தம்புள்ள ஓவியத்தைக் கொண்டு தான் இன்றும் சகலரும் அந்தப் போர் குறித்த கற்பிதத்துக்கு வலுசேர்த்து வருகிறார்கள். பயன்படுத்தி வருகிறார்கள். அந்த காட்சியைத் தான் பலரும் சிலைகளாகவும், கதைகளாகவும் மேலதிகமாக புனைந்துவருகிறார்கள். அதுபோல "சிங்கக் கொடி"யை சிங்களக் கொடியாக புனிதப்படுத்தும் மரபும் இங்கிருந்துதான் வளர்த்தெடுக்கப்பட்டிருக்கிறது.

சரி... சிங்கக் கொடி கண்டி ராஜ்ஜியத்தின் கொடி என்றால் இலங்கையின் தேசியக் கொடி எது? சிங்களவர்களின் கொடி தான் என்ன? அவ்வாறு சிங்களவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கொடி என்று ஒன்று வரலாற்றில் இருந்திருக்கிறதா? அல்லது ஒட்டுமொத்த இலங்கையையும் சிங்களவர்களின் நாடாகத் தான் என்றாவது இருந்ததுண்டா?

இலங்கையில் சிங்கத்தை ஒரு குறியீடாகவோ, சின்னமாகவோ கொடியாகவோ பயன்படுத்தப்பட்ட சில சந்தர்ப்பங்கள் வரலாற்றில் இருக்கத்தான் செய்கின்றன. அதேவேளை கிடைக்கப்பெற்ற தொல்பொருள் சான்றுகளைத் தவிர்ந்த "சிங்கம் சின்னமாக" இருந்ததன் கதைகள் நம்பகத்தன்மை குறைந்ததாகவே உள்ளதை பேராசிரியர் கணநாத் ஒபேசேகர உள்ளிட்ட சில வரலாற்றாசிரியர்கள் எடுத்துக்காட்டத் தவறவில்லை.

இலங்கைக்கு பௌத்தத்தைப் பரப்பிய அசோக சக்கரவர்த்தியின் தாக்கமே "சிங்கம்" சின்னமானதன் பின்னணிக் கதையாகக் இருக்கக் கூடுமென பலரும் நம்புகின்றனர்.

இன்றும் இந்தியாவின் தேசிய அரச இலட்சினையாக பயன்படுத்தப்பட்டுவருவது மூன்று சிங்கங்களைக் கொண்ட அசோகனின் சின்னம் என்பது நமக்குத் தெரியும். அசோகன் இலங்கைக்கு தனது மகன் மகிந்தனை அனுப்பி பௌத்தத்தை இலங்கையில் பரப்பியபோது அனுராதபுரத்தை தலைமையாகக் கொண்டு தேவனம்பியதிஸ்ஸன் ஆட்சி புரிந்துவந்தான். தேவனம்பியதிஸ்ஸன் பௌத்தத்தைத் தழுவினான். அதுபோல அசோகனுக்கும் தேவனம்பியதிஸ்ஸனுக்கும் இடையில் பல தடவைகள் பரிசுகள் பரிமாறிக்கொள்ளப்பட்ட செய்திகள் காணக் கிடைக்கின்றன. இந்த பின்னணியில் தான் தேவனம்பியதிஸ்ஸனின் கொடியும் கூட சிங்கக் கொடியாக அமைகிறது.

இலங்கையில் சிங்கத்தைக் கொடியாகக் கொண்டிருந்தவர்கள் அந்தந்த ராஜதானிகளின் கொடிகளாகத்தான் அவை இருந்திருக்கின்றனவேயொழிய ஒரு இனத்தை அது பிரதிநிதித்துவப்படுத்தியது கிடையாது.

ஐரோப்பியர்கள் பலரின் குறிப்புகளில் மன்னர் சூரியனையும், சந்திரனையும் கொண்ட கொடியையும், சில நேரங்களில் அன்னம், மயில், மான், கரடி, சிங்கம், புலி, யானை, மேலும் சில பறவைகள் போன்ற



பல்வேறு பிராணிகளைக் கொண்ட கொடியையும் பயன்படுத்தியதாகவும் குறிப்பிடுகின்றனர். றொபர்ட் பேர்சிவல் தனது நூலில் (An Account of the Island of Ceylon: Containing Its History, Geography) ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் பரிவாரங்கள் சூரியனின் உருவத்தைக்கொண்ட கொடியைக் தாங்கிச் சென்றதாக குறிப்பிடுகிறார்.

இதேவேளை இன்று நாம் பயன்படுத்தும் வாளேந்திய சிங்கத்தின் உருவத்துக்கு நிகராக ஐரோப்பாவில் பல சின்னங்களும், கொடிகளும், லட்சினைகளும் இருந்திருக்கின்றன. இன்றும் இருக்கின்றன. போர்த்துகேயர், ஒல்லாந்தர் காலத்தில் அவர்களின் முக்கிய லட்சினைகளாகவும், சின்னங்களாகவும், நாணயங்களிலும் சிங்க உருவம் பயன்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். அவற்றின் தாக்கம் கூட இந்தக் காலப் பகுதியில் இருந்திருக்கலாம் என்றும் நாம் சந்தேகிக்க முடியும்.

இப்போது சொல்லுங்கள் சிங்கக் கொடி/ கண்டியக் கொடி எப்படி தேசியக் கொடியாக முடியும்? இனப்பிரச்சினையின் ஒரு குறியீட்டு அடையாளமாக இன்று இந்த கொடி உருவகமாகுமளவுக்கு இன்று வந்து நிற்கிறதல்லவா?

# மட்டக்களப்பில் வக்கிக்கரத்தையிருந்து ஆட்டோ ரிக்ஸா வரை

**கலாபூசணம் அரங்கம்**
**இரா.தவராஜா**

சென்ற இதழில் வக்கிக் கரத்தை முதல் வாடகைக்கார் வரை வாசகர்களுக்கு தந்திருந்தேன். இவ்விதழில் ஆட்டோ பற்றி ஆராய்வோம்.

மட்டு மாவட்ட விவசாய பொறியியற் கூட்டுறவுச் சங்கம் பல நிலைகளில் மக்களின் உயர்வுக்கான முன்னேற்றகரமான செயற்பாடுகளை முன்னிலைப்படுத்தி வந்ததும் தொடர்ந்து செயல் பட்டு வருவதும் நாம் அறிந்ததே. முன்பு உழவு இயந்திரங்களின் விநியோகஸ்தர்களாக இருந்தது மட்டுமல்லாது அவைகளை பழுது பார்ப்பதற்கென திருத்துனர்களையும் உருவாக்கித் தந்தார்கள்.

இந்த மட் டு மாவட்ட விவசாய பொறியியற் கூட்டுறவுச் சங்கம். மட்டக்களப்பில், 1948ம் ஆண்டு சித்திரை மாதம் 27ம் திகதி e.d./274 என்னும் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டு நிறுவன ரீதியாக செயற்படத்தொடங்கியது.

முன்பு "ரக்ரர்யூனியன்" என்ற பெயரால் மக்களால் அழைக்கப்பட்டு கள்ளியங்காட்டில் தன்பணியைச் ஆரம்பித்த இக்கூட்டுறவுச்சங்கம் தொடர்ந்து. முகத்துவாரவீதிக்கு நகர்த்தப்பட்டு அங்கும் மக்களின் பயணத் தேவையை இலகுபடுத்த அன்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக இருந்த திரு.லோகநாயகம் அவர்களின் ஆலோசனைக்கமைய ஆட்டோ ரிக்ஸாவை மட்டக்களப்பில் கொண்டு வருவதென 12.12.1991ல் சங்கத்தின் தலைவரான திரு.சி.சின்னராசா அவர்களின் தலைமையில் சங்கம் தீர்மானமொன்றை நிறைவேற்றியது. இத்தீர்மானத்திற்கமைய சங்கத் தலைவர் திரு.சி.சின்னராசாவும் சங்கத்தின் பொது முகாமையாளராக இருந்த திரு.எல்.மோஸஸ் அவர்களும் ஆட்டோ ரிக்ஷாவை கொள்வனவு செய்ய 15.12.1991ல் கொழும்பிலிருந்த றிச்சர்ட் பீரிஸ் கம்பெனிக்கு சென்று வந்தார்கள். இருவருக்குமுரிய செலவான ரூபா 1578ஐ சபை அங்கிகரித்தது.

கொண்டுவரப்பட இருக்கும் ஆட்டோ ரிக்ஷாவுக்கு ஏற்படும் பழுதுகளை சீர்செய்ய சங்கத்தின் ஊழியராகவிருந்த திரு.கே.அருந்தவராசா மெக்கானிக்காக பயிற்சிபெற கொழும்பு றிச்சர்ட்பீரிஸுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அதேவேளை சாரதிகளுக்கான தேர்வு 25.02.1992ல் நடை பெற்றது. பரீட்சையில் பின்வரும் மூவர் தெரிவு செய்யப்பட்டார்கள். 1.திரு. சீனித்தம்பி அன்னதாஸ். 2.திரு.சதானந்தன் ருவீகரன். 3.செல்லையா ரஞ்சன். இவர்களில் அன்னதாஸும் ருவீகரனும் சாரதிகளாக தெரிவு செய்யப்பட மற்றவர் பதில் சாரதியாக வைக்கப்பட்டார்.

கொழும்பிலிருந்து இரு ஆட்டோ ரிக்ஷாக்களும் புகையிரத பொதிப் பெட்டியில் மட்டக்களப்புக்கு கொண்டு வரப்பட்டன. இவ்விரு ஆட்டோக்களையும் 21---0763 ருவீகரனும் 21---0764 ஐ அன்னதாஸ்} க்கும் சவாரிபெற ஒப்படைக்கப்பட்டது. ருவீகரன் பஸ் நிலைய தரிப்பிடத்தையும் அன்னதாஸ் அரசடி தரிப்பிடத்தையும் தங்களின் வாடிக்கையான தரிப்பிடமாக நிறுவிக் கொண்டார்கள்.

இவ்வண்டிகளின் சவாரி ஆரம்பவிழா 26.02-1992ல் மிககோலாகலமாக நடைபெற்றது. இவ்விழாவுக்கு ரிச்சர்ட்பிரீஸ் கம்பெனியின் பிரதம முகாமையாளரும் விற்பனை முகாமையாளரும் விசேட உலங்கு வானூர்தியில மட்டக்களப்புக்கு வருகை தந்திருந்தனர்.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட ஆட்டோ சேவையின் அடுத்த வரவாக எல்லை வீதியில் அமைந்துள்ள வருமானவரி இலாகாவில் பணியாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் அதேயிடத்தில் பணியாற்றிய சிற்றூளியரான திரு.எஸ்.காங்கேசன் என்பவருக்கு ஒரு ஆட்டோவை (21---1665) எடுத்துக் கொடுக்க மட்டக்களப்பில் தனியாரின் ஆட்டோவாக இதுவே பதிவாகியது. மேற்படி சமாசம் பீரீஸ் கம்பெனியின் வினியோகஸ்தராக இருந்து வேண்டியவர்களுக்கு ஆட்டோவை வரவழைத்துக் கொடுத்தார்கள். இதனால் ஆட்டோக்களின் வருகை அதிகமாகியது. தலைவர் திரு.சி.சின்னராசாவின் முயற்சி. மட்டக்களப்பில் இப்போது பல வழிகளிலும் குறைந்தது 2000 குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு அடிக்கல்லாகியது. அதற்காக இக்கட்டுரையாளர் இவ்வேளை நன்றியைத் தெரிவிக்கின்றார்.

சங்க வரலாறு

ஆட்டோ சாரதிகள் சுயமாகவே தங்கள் வாழ்வாதாரத்தை கொண்டு சென்றனர். அவ்வேளையில் சாரதிகளோடு பொலிசார் பல சந்தர்ப்பங்களில் முரண்பட்டனர். அரசடி தரிப்பிடத்தில் ஓடிய 21 --- 1840 இலக்கமுடைய ஆட்டோவை செலுத்தி வந்த இரா.தவராஜா கல்லடிப்பால இறக்கத்தில் இருந்த சோதனைச் சாவடியில் 12.04.1994ல் பொலிசாரால் தாக்கப்பட்டு சரியாக 13 நாட்களின் பின் 25.04.1994ல் தாண்டவன்வெளி தரிப்பிடத் தைச் சேர்ந்த 21---3171 இலக்கமுடைய ஆட்டோவை செலுத்தி வந்த கோ.சுயேந்திரன் என்னும் சாரதி தாக்கப்பட்டார்.

இவைகளினால் ஆத்திரமடைந்த சகசாரதிகள் ஒன்றாகக்கூடி சட்டத்தரனி அமரர் சர்வானந்தா விசுவையா அவர்களுடன் காட்டுக்கந்தோர் பொலிஸ்தலைமைக் காரியாலயத்துக்கு 27.04.1994ல் சென்று முன்வாசலில் ஆட்டோக்களைப் போட்டு மறியல் செய்தனர். சட்டத்தரனியின் வாதாட்டத்தாலும் எடுத்துரைப்பாலும்; அப்பொலிஸ்காரர் இருவரும் உடனடியாக இடமாற்றம் செயயப்பட்டனர். அன்று கூடிய ஆட்டோ சாரதிகள் அனைவரும் இரா.வதராஜாவின் அழைப்பின் பேரில் அப்படியே பயனியர் வீதியில் இருக்கும் விபுலானந்தா படிப்பகத்தக்குள் நுழைந்து தங்களுக்கேற்படும் இப்படியான பிரச்சனைகளுக்கு முகம்கொடுக்க சங்கம் தேவையெனக் கருதி ஆட்டோ சங்கத்தை உருவாக்கினர்.

சகலதெரிவுகளும் ஏகமனதாகவே இடம்பெற்றன சங்கத்தின் தலைவராக திரு. இரா.தவராஜா அவர்களும் செயலாளராக திரு. டிலிமா அவர்களும் தனாதிகாரியாக திரு.வின்சன் அவர்களோடு ஏழு நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவாகினர். ஏதிர்வரும் 27ம்திகதி சித்திரை மாதம் ஆட்டோ சங்கத்துக்கு 25 வயது பூர்த்தியாகிறது.

யாப்பு விதிகளும் இலட்சனையும் சங்கயாப்பு விதிளை சங்க ஸதாபகர் இரா. தவராஜா எழுதி பொதுக்கூட்டத்தில் சமர்பிக்க அது பரிசிலிக்கபபட்டு சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இலட்சனை உருவாக்க முயற்சித்த நேரத்தில். நான் யார் தெரியுமா? திரைப்படத்தில இடம்பெற்ற பாடலொன்று வானொலியில் இடம்பெற்றது.


ஆட்டோ சங்கத்தின் ஸ்தாபகரும் இக்கட்டுரையாளருமான இரா.தவராஜா.

அதில் வரும் ஓரடி என்னை மிக கவர்ந்தது. "பாலூறும் பருவத்திலே பல்லாக்கு செய்தானம்மா" என்பதே. அவ்வடியில் வரும் பல்லக்கு என்பது ஒருவரை வைத்து தூக்கிக் கொண்டுபோய் குறிப்பிடும் இடத்துக்கு கொண்டு சேர்ப்பது. எங்கள் தொழிலும் பயணிகளை விரும்பும் இடத்துக்கு கொண்டு சேர்ப்பதே. அதனால் அதை முக்கியப்படுத்தி வாகனங் களை இழுத்துக் கொண்டு ஓடுவதை குதிரைப்பவர் என்பார்கள் எனவே பல்லாக்கில் குதிரையை இணைத்து நம்நாட்டு வளங்களை யும் இணைத்து நான் வழங்கிய ஆலோசனையின்படி கே.ஜீ.ரூபன் புஸ்பகுமார் என்பவர் அச்சித்திரத்தை வரைந்து தந்தார் அதை சபை ஏற்றுக்கொள்ள அது சங்கத்தின் இலட்சனையானது. (தொடரும்)

---

# இரா.உதயணன் இலக்கிய விருது விழாவில் இலக்கிய மைந்தர்கள் மூவருக்கு கௌரவம்

**ச. மணிசேகரன்**



இம்முறை இலங்கை மற்றும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் இணைந்து இரா.உதயணன் இலக்கிய விருது விழா 17/03/2019 கொழும்பு தமிழ் சங்கத்தில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் மண்ணின் மைந்தர்கள் மூவருக்கு விருது வழங்கி கௌரவிக்கிறார்கள்.

ஒருவர் செங்கதிரோன்.

ஈழத்து இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்ட பெயர். தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் எனும் இயற் பெயரைக் கொண்டவர். மட்டக்களப்பின் மைந்தன். இவர் "விளைச்சல் "காவியத்தை படைத்தமைக்காக 2018 இரா.உதயணன் விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறார்.

ஆக்கவிலக்கியக்காரர், சஞ்சிகை ஆசிரியர், சமூக செயற்பாட்டாளர் என பன்முகப் பார்வை கொண்டவர். இலக்கியத்திற்காய் அவரை பலர் நேசிப்பர் சமூக செயற்பாட்டிற்காய் நேசிப்பர் பலர், இரண்டிற்குமாய் நேசிப்பர் மேலும் பலர்.

செங்கதிர் சஞ்சிகையை 2008 தை தொடக்கம் 2013 வரை 61 இதழ்களை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் வெளிக் கொணர்ந்தவர். கிழக்கு தமிழர் ஒன்றியம் என்ற விதையை நட்டு பெரிய விருட்சமாக்கி அதிர்வை ஏற்படுத்தியவர், அதற்காக பட்ட கல்லெறிகளும் சொல்லெறிகளும் பலநூறு. விடாது தொடர்ந்து இயங்கும் சமூகப் போராளி, அம்பாறை மாவட்ட தமிழர்கள் பற்றிய அரிய பல தகவல்களை கொண்ட கட்டுரைகளை, தொடர்ந்து அரங்கம் உட்பட பல்வேறு பத்திரிகைகளிலும் தந்துகொண்டிருக்கும் எழுத்தூழியக்காரர்.

கிழக்கின் பண்பாட்டுக் கூறாகிய, கண்ணகி கலை இலக்கிய கூடல் ஆண்டுதோறும் பேசவும் அலசவும் ஆராயவும் நிகழ்த்தப்படுவதன் மூலகர்த்தா, இவ்வாறான ஆளுமையாளனான செங்கதிரோனை சிறப்புற வாழ்த்துகிறோம்.

மற்றவர் அ.இருதயநாதன். "அமேசன் காட்டில் அழகன் பூசாரி "எனும் சிறு கதை தொகுப்பிற்கு கலைக் கோட்டன் அ. இருதயநாதன் எனும் எமது மண்ணின் மைந்தனான மற்றுமொரு படைப்பாளிக்கு சிறு கதைத்தொகுப்பிற்காக உதயணன் விருது வழங்கப்படுகிறது.

சிறு கதைகளுக்கு அப்பால் நாடக, கூத்துக் கலைஞன். நடிப்பு, தயாரிப்பு, இயக்கம் என தொடர்ந்து இயங்குபவர். மட்டக்களப்பு மாவட்ட சாரணர் ஆணையாளராகவும் அதிபராகவும் இருந்தவர்.

"உணர்ச்சிகள் " நாடக நூல் இவரின் மற்றுமொரு எழுத்துப் படைப்பு. மகிழ்வான வாழ்த்துக்கள்.

அசுர எழுத்தாளர் செ.குணரெத்தினம்.

இலக்கியத் துறைக்காக வாழ்நாள் சாதனையாளர் விருது பெறுகிறார் செ.கு. எழுவான் கரை மக்களின் பண்பாட்டு கோலங்களை நாவல்களாகவும் சிறு கதைகளாகவும் தம் படைப்புகளில் பேசப் பண்ணியவர் ,பத்துக்கும் மேற்பட்ட நாவல்களை எழுதியதுடன் பல பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றவர். "துன்ப அலைகள் " சுபமங்களா நாவல் போட்டியில் பரிசு பெற்றது. இவரின் நல்ல நாவல்களில் இதுவும் ஒன்று. இவ்வாறே இம் மக்களின் வாழ்வியலை இவரின் சிறு கதைகளும் பேசுகின்றன.

நகைச்சுவை உணர்வுடன் "அமிர்தகழியான்"எனும் புனைபெயருடன் பல கட்டுரைகளையும் தந்தவர். இவரின் முதற் குழந்தையே கவிதைதான். ஆயிரக்கணக்கான கவிதைகளுக்கு

தொடர்ச்சி... (பக்கம் -15 )

NCL
NELSON COLLEGE LONDON

IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY



**Are you 18+ and have GCSEs or work experience?**

**Do you have A levels but missed your place at university?**

- Foundation Degree Business (London Metropolitan University)
- Foundation Degree Hospitality Management (London Metropolitan University)
- HND Business (Pearson)
- HND Hospitality Management (Pearson)
- BA (Hons.) Final Year- Business (London Metropolitan University)
- BA (Hons.) Final Year- Hospitality Management (London Metropolitan University)

Student Finance Available

Judian Joseph
Mob: 07759802175
Mob: 07453641556



AGNI Pulayavely

# அக்கினி தையல் நிலையம்

## பதுளை வீதி, தம்பானம்வெளி

(நாகதம்பிரான் கோவில் அருகாமையில்)

நன்கு பயிற்சிபெற்ற தையல் நிபுனர்களால் குறைந்த விலையில் மிகவும் நேர்த்தியான முறையில் அனைத்து விதமான ஆடைகளும் தைப்பதற்கு நாட வேண்டிய ஒரே இடம் அக்கினி தையல் நிலையம் தம்பானம்வெளி

| | | |
|---|---|---|
| சாறி பிளவுஸ் (சாதாரணம்) | – | 250 ரூபாய் |
| பெரியவர் ஆடை (சட்டை) | – | 200 ரூபாய் |
| சிறியவர் ஆடை ( சட்டை) | – | 100 ரூபாய் |
| சாரம் பொருத்துவதற்கு | – | 50 ரூபாய் |
| சல்வார் | – | 250 ரூபாய் |
| டொப் | – | 150 ரூபாய் |
| நைட் ட்ரஸ் | – | 150 ரூபாய் |
| ஸ்கர்ட் பிளவுஸ் | – | 200 ரூபாய் |
| சீருடை | – | 200 ரூபாய் |
| பேபிப்ரொக் | | |



(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

# எமது மட்டு. மண்ணின் புதல்விகளை ஊக்கப்படுத்துவோம்



பெண்கள் கால்பந்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சார்பில் பல சாதனைகளைப் புரிந்த அம்பிளாந்துறை மற்றும் பன்சேனை அணிகள் வெபர் மைதானத்தில் மோதுகின்றன.

இது நட்புரீதியான ஒரு போட்டியாக இருந்தாலும் அவர்களின் முன்னேற்றத்துக்கான ஒரு போட்டி. அவர்களுக்கு அடுத்த மூன்று வருடங்களுக்கு அரங்கம் நிறுவனம் அனுசரணை வழங்கவுள்ளதன் ஆரம்பம் இது.

இவர்கள் மாகாண மட்டத்தில் பல சாதனைகளை இதுவரை புரிந்திருக்கிறார்கள். தேசிய மட்டத்தில் இவர்களை முன்னணி அணிகளாக மாற்றுவதே எமது அடுத்த இலக்கு. இதற்கான எமது மாவட்டச் செயலகத்தின் முயற்சிகளில் எம்மோடு கைகோர்க்க முன்வந்த அரங்கம் நிறுவனத்தை வரவேற்கிறோம்.

அதேவேளை எமது மாவட்டத்தின் இந்த இரு கால்பந்து அணிகளையும் ஊக்கப்படுத்த அனைவரும் ஒன்றாக இணையவும் அழைப்பு விடுக்கிறேன்.

அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.
மா. உதயகுமார்
மாவட்ட அரசாங்க அதிபர்
மட்டக்களப்பு மாவட்டம்




# எமது பெண்கள் சாதிக்க வேண்டும்!



பன்சேனை பாரி வித்தியாலயமும் அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயமுமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் தடவையாக பெண்கள் பாடசாலைகள் இரண்டு உதைபந்தாட்ட போட்டியில் மோதவுள்ள இவ்வேளையில் அதற்கான ஒரு வாழ்த்துச் செய்தினை வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

புலம்பெயர்ந்த நாட்டில் நாங்கள் வாழ்ந்தாலும் எங்கள் சிந்தனைகள், செயல்கள் எல்லாம் இம்மண்ணையே இலக்கு வைத்து நிற்கின்றன. எம் மண்ணில் பிறந்தவர்கள் சாதனை வீரர்களாக வரவேண்டும் என்பதில் நான் மிகவும் கரிசனையுடையவனாக இருக்கின்றேன். அதிலும் விளையாட்டில் எம் மண் மிளிர வேண்டும் என ஆசைப்படுவதில் உங்களில் நானும் ஒருவன். நான் அறிந்த மட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரிக்கெட் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் நடந்ததை அறிந்துள்ளேன்.

ஆனால் முதல் தடவையாக இரு பாடசாவைகள் உதைபந்தாட்டத்தில் மோதவுள்ளதை அறியும் போது பெருமையடைகின்றேன். இதை ஏற்பாடு செய்து நடாத்தும் அரங்கம் பத்திரிக்கைக்கு எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

இப்பாடசாலை வீராங்கனைகள் மாகாண மட்டத்தில் சாதனை படைத்துள்ளார்கள் என நான் அறிகிறேன். இவர்கள் தேசிய மட்டத்தில் சாதனை வீராங்கனைகளாக திகழ வேண்டும் என வாழ்த்துவதுடன் இரு பாடசாலைகளும் ஒற்றுமையுடன் செயற்படுவதுடன் இச்சமர் 100 ஆண்டுகள் நடைபெற வாழ்த்துகின்றேன்.

'பெண் தன் வயிற்றில் சுமந்த ஆணால் சாதனை படைக்க முடியுமென்றால் பெண்ணால் ஏன் சாதனை படைக்க முடியாது? காலத்தின் தேவை காலம் அறியும்'

திரு.பு.வசீகரன்
நம்பிக்கையாளர் சபை பிரதிநிதி (லண்டன்)
கோட்டைமுனை விளையாட்டு கழகம், மட்டக்களப்பு

# வெபருக்கு வாருங்கள் வாசகர்களே!

அரங்கத்தின் வாசகர்களுக்கு அன்பான வேண்டுகோள்,

எமது மண்ணின் படுவான்கரையைச் சேர்ந்த வீராங்கனைகளின் கால்பந்து போட்டி ஒன்று வரும் திங்கட்கிழமை, பிற்பகல் 3 மணிக்கு வெபர் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இது வெறுமனே ஒரு கால்பந்துப் போட்டி அல்ல. இதற்கு பல முக்கியத்துவங்கள் இருக்கின்றன.

எமது மண்ணைச் சேர்ந்த இரு பெண்கள் அணிகள் கால்பந்துப் போட்டியில் மோதுகின்றன. அவை எமது மாவட்டத்தின் பிந்தங்கிய படுவான்கரைப் பகுதியைச் சேர்ந்தவை.

அது போர் கடந்துபோன காரணத்தால் அளவிடமுடியாத அழிவுகளை எதிர்கொண்ட பிரதேசம். கால்பந்தில் தேசிய மட்டத்தில் சாதிக்க வேண்டும் என்பது அந்தப் பெண்களின் இலக்கு. அதேவேளை விளையாட்டின் ஒரு சில துறைகளைத்தவிர எமது மாவட்டம் தேசியமட்டத்தில் மிகவும் பிந்தங்கிய நிலையிலேயே தற்போது காணப்படுகின்றது.

ஆகவே இந்தப் பெண்களின் எதிர்கால வெற்றி எமக்கும், மாவட்டத்துக்கும் மிகவும் முக்கியமானதாகும்.

ஆனால், பல வசதிக்குறைபாடுகளுடன் இருக்கும் அந்த வீராங்கனைகளுக்கு அடுத்த மூன்று வருடங்களுக்கு அரங்கம், தனது நண்பர்களுடன் சேர்ந்து அனுசரணை வழங்கவுள்ளது.

அந்த அனுசரணையின் முதல் அங்குரார்ப்பணமே இந்த நட்பு ரீதியிலான ஆட்டம். வெபர் மைதானத்தில் களம் காண்பது படுவான்கரைப் பெண்களுக்கு மிகவும் முக்கியமானது. அடுத்தகட்ட நகர்வுகளுக்கு இது பல வழிகளிலும் உதவும்.

ஆகவே வாசகர்களே வெபர் அரங்குக்கு வரும் திங்கட்கிழமை(மார்ச் 18) வந்து உங்கள் வீராங்கனைகளுக்கு உங்கள் ஆதரவை வழங்குங்கள்.

திரண்டு வாருங்கள்.
அன்புடன்
சீவகன் பூபாலரட்ணம்.

# விளையாட்டு

## பிரதேச செயலக மட்டத்தில் சாதனை படைத்த கோட்டமுனை விளையாட்டுக் கழகம்





சுமார் 15 வருடங்களுக்கு பின் கோட்டைமுனை விளையாட்டு கழகம் பிரதேச செயலக மட்ட விளையாட்டு போட்டியில் 20 முதல் இடங்களை பெற்று சாதனை படைத்துள்ளது.

ஆரம்ப காலங்களில் கிரிக்கெட் விளையாட்டை மட்டும் விளையாடி வந்த கோட்டைமுனை விளையாட்டு கழகம் பிற்காலங்களில் மெய்வல்லுனர் போட்டிகளிலும் கலந்து கொண்டு தம்மை ஒரு சிறந்த விளையாட்டு கழகமாக காலூன்றி வந்தது. அக்காலத்தில் மைக்கல்மென் விளையாட்டு கழகம், பாடுமீன் விளையாட்டு கழகம், சிவானந்தா விளையாட்டு கழகம், லைட்ஹவுஸ் விளையாட்டு கழகம், பயனியர் விளையாட்டு கழகம் என பலம் வாய்ந்த கழகங்களுடன் போட்டி போட்டு பல வெற்றிகளை பெற்று சாதனை படைத்தது. அதேபோல இன்றும் தம் இளம் வீர வீராங்கனைகளை களம் காணச்செய்து, இன்று வரை நடைபெற்ற போட்டிகளில் 20 முதல் இடங்களை பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது. இதில் 3 போட்டிகளிலும் சாதனை வீர வீராங்கனைகளாக பி.கிருஷ்ரிகாவும் கே.டிலக்சனாவும் பு.கிசோமிகாவும்

எஸ்.தர்சனும் தெரிவாகியுள்ளர். வெற்றிபெற்ற வீர, வீராங்களைகள் விபரம் பின்வருமாறு

01 P.கிருஷ்ரிகா
நீளம் பாய்தல் முதலாமிடம்
02 P.கிருஷ்ரிகா
400 மீட்டர் ஓட்டம் முதலாமிடம்
03 P.கிருஷ்ரிகா
முப்பாச்சல் முதலாமிடம்
04 K.டிலக்சனா
1500 மீட்டர் ஓட்டம் முதலாமிடம்
05 K.டிலக்சனா
800 மீட்டர் ஓட்டம் முதலாமிடம்
06 K.டிலக்சனா
110 மீட்டர் தடைதாண்டல் ஓட்டம் முதலாமிடம்
07 S.தர்சன்
1500 மீட்டர் ஓட்டம் முதலாமிடம்
08 S.தர்சன்
800 மீட்டர் ஓட்டம் முதலாமிடம்
09 S.தர்சன்
முப்பாச்சல் முதலாமிடம்
10 P.கிசோமிகா
100 மீட்டர் ஓட்டம் முதலாமிடம்
11 P.கிசோமிகா
உயரம் பாய்தல் முதலாமிடம்
12 P.கிசோமிகா
410 தடை தாண்டல் ஓட்டம் முதலாமிடம்
13 S.செரோன் நிலக்சன்
நீளம் பாய்தல் முதலாமிடம்
14 S.சகிர்தன்
ஈட்டி எறிதல் முதலாமிடம்
15 S.கிறிஸ்டிகா
ஈட்டி எறிதல் முதலாமிடம்
16 R.ரக்சன்
110 மீட்டர் தடை தாண்டல் ஓட்டம் முதலாமிடம்
17 R.ரக்சன்
410 மீட்டர் தடை தாண்டல் ஓட்டம் முதலாமிடம்
18 பெண்கள்
4x100 அஞ்சல் ஓட்டம் முதலாமிடம்
19 பெண்கள்
4x400 அஞ்சல் ஓட்டம் முதலாமிடம்
20 பெண்கள்
பூப்பந்தாட்டம் முதலாமிடம்
21 ஆண்கள்
பூப்பந்தாட்டம் இரண்டாமிடம்
22 S.டினுஜா
200 மீட்டர் ஓட்டம் இரண்டாமிடம்
23 S.கிருசிகா
குண்டு போடுதல் இரண்டாமிடம்
24 T.ரோபிகா
1500 மீட்டர் ஓட்டம் இரண்டாமிடம்
25 S.கிருஸ்டிகா
பரிதிவட்டம் வீசுதல் இரண்டாமிடம்
26 T.ரோமிக்கா
800 மீட்டர் ஓட்டம் இரண்டாமிடம்
27 M.தவாஜினி
ஈட்டி எறிதல் இரண்டாமிடம்
28 P.மிதுர்ஸா
முப்பாச்சல் இரண்டாமிடம்
29 P.தீபிசன்
உயரம் பாய்தல் இரண்டாமிடம்
30 T.வதுசா
உயரம் பாய்தல் இரண்டாமிடம்
31 M.டனிஸ்டன்
110 மீட்டர் தடை தாண்டல் ஓட்டம் இரண்டாமிடம்
32 M.டனிஸ்டன்
410 மீட்டர் தடை தாண்டல் ஓட்டம் இரண்டாமிடம்
33 ஆண்கள்
4x100 அஞ்சல் ஓட்டம் இரண்டாமிடம்
34 S.சபிதாப்
5000 மீட்டர் ஓட்டம் மூன்றாமிடம்
35 P.பிரியநிதர்சினி
குண்டு போடுதல் மூன்றாமிடம்
36 T.ரோமிகா
நீளம் பாய்தல் மூன்றாமிடம்
37 K.மிதுஷாளினி
1500 மீட்டர் ஓட்டம் மூன்றாமிடம்
38 M.திவாஜினி
பரிதிவட்டம் வீசுதல் மூன்றாமிடம்
39 P.நிதர்சனா
800 மீட்டர் ஓட்டம் மூன்றாமிடம்
40 T.ரித்திகா
முப்பாச்சல் மூன்றாமிடம்

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

## மண்முனை வடக்கு பிரதேச செயலக விளையாட்டு போட்டிகள்



வடக்கு பிரதேச செயலக விளையாட்டு கழகங்கிடையிலான நடைபெற்ற விளையாட்டு போட்டிகளை பற்றி பார்ப்போம்.

கரப்பந்தாட்ட போட்டியுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் முதல் வெற்றியை சிவானந்தா விளையாட்டு கழகம் பெற்றுக்கொண்டது. கிரிக்கெட் போட்டியில் சென்றலைட் விளையாட்டு கழகமும் எல்லே போட்டியில் எவகிறீன் விளையாட்டு கழகமும் கபடி போட்டியில் பட்டி விளையாட்டு கழகமும் பெற்றுக்கொள்ள மெய்வல்லுனர் போட்டிகள் கடந்த 10ம்திகதி வெபர் மைதானத்தில் நடைபெற்றன. இதில் கோட்டைமுனை விளையாட்டு கழகம் அதிகப்படியான போட்டிகளில் முதலிடத்தை பெற்றுக்கொண்டது அத்துடன் உதைபந்தாட்ட போட்டியில் இறுதிப்போட்டிக்கு கோபுரா விளையாட்டு கழகமும் டிஸ்கோ விளையாட்டு கழகமும் மோதவுள்ளன என மண்முனை வடக்கு பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் திரு பிரசாத் தெரிவித்தார்.

மண்முனை வடக்கு பிதேச செயலகத்தின் இறுதி விளையாட்டு விழா மிக விரைவில் நடைபெறவுள்ளதாகவும் அன்றைய தினம் அஞ்சலோட்ட போட்டிகளும் இறுதி உதைபந்தாட்ட போட்டிகளும் நடைபெறவுள்ளதாகவும் விளையாட்டு உத்தியோகத்தர் திரு பிரசாத் தெரிவித்தார்.

## கிழக்குக்கரையோரச் சமரில் விபுலாநந்தா மகத்தான வெற்றி!

--- காரைதீவு சகா ---

காரைதீவு விபுலாநந்தா மத்தியகல்லூரிக்கும் கல்முனை உவெஸ்லி உயர்தரப்பாடசாலைக்கும் இரு தினங்களுக்கு முன்னதாக காரைதீவில் இடம்பெற்ற 'கிழக்கு கரையோரச் சமரில்' 46ஓட்டங்களால் காரைதீவு விபுலாநந்தா அணி வெற்றிவாகைசூடியது.

டெலிகொம் ஸ்ரீலங்கா ஸ்தாபனத்தின் அனுசரணையோடு இடம்பெற்ற இம்மாபெரும் கன்னிப்போட்டி(Maiden Big Match) காரைதீவு விபுலாநந்தா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விபுலாநந்தா அணி 28.5 ஓவரில் 137ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சோபிதாஸ் 10பவுண்டரிகள் அடங்கலாக 49 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கல்முனை உவெஸ்லி அணியினர் 24 ஓவர்களில் சகலவிக்கட்டுகளையும் இழந்து 89 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

சிறந்த பந்துவீச்சாளராக விபுலாநந்தா அணியின் விதுசன் தெரிவானார். அவருக்கான வெற்றிக்கிண்ணாத்தை உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா வழங்கிவைத்தார்.

சிறந்த துடுப்பாட்டவீரராக விபுலாநந்தா அணியின் சோபிதாஸ் தெரிவானார். அவருக்கான வெற்றிக்கிண்ணத்தை டெலிகொம் நிறுவனத்தின் கல்முனைப் பிராந்திய முகாமையாளர் பிரான்சிஸ் நியுட்டன் நிசாந்த் வழங்கிவைத்தார்.

போட்டியின் சிறந்த வீரராக விபுலாநந்தா அணியின் சிறிஸ் தெரிவானார். அவருக்கான வெற்றிக்கிண்ணத்தை காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில் வழங்கிவைத்தார்.

## ஐந்தாவது தடவையாக காரைதீவு சாம்பியன்



காரைதீவு நிருபர் சகா)

காரைதீவு பிரதேச செயலகம் நடாத்திய இவ்வாண்டுக்கான பிரதேசமட்ட விளையாட்டுப்போட்டியில் காரைதீவு விளையாட்டுக்கழகம் 29 தங்கப்பதக்கங்களைப் பெற்று இவ்வாண்டுக்குரிய சாம்பியனாக வெற்றிவாகை சூடியது.

இக்கழகம் தொடர்ந்து ஐந்தாவது வருடமாகவும் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டுக்குரிய போட்டிகளில் இக்கழகம் 29 தங்கப்பதக்கங்கள், 18 வெள்ளிப்பதக்கங்கள், 02வெண்கலப்பதக்கங்கள் பெற்றது.

இரண்டாவதாக ஜொலிகிங்ஸ் விளையாட்டுக்கழகம் 04 தங்கப்பதக்கங்கள், 06 வெள்ளிப்பதக்கங்கள், 10 வெண்கலப்பதக்கங்களைப் பெற்றிருந்தது. மூன்றாவதாக விவேகானந்தா விளையாட்டுக்கழகம் 03 தங்கப்பதக்கங்கள், 10வெள்ளிப்பதக்கங்கள், 15வெண்கலப்பதக்கங்களைப் பெற்றிருந்தது.

காளி, மாரி, பேய்ச்சி, வைரவர் ஆகிய சிறு தெய்வங்கள் வீடுகளிலே வைத்து வணங்கும் தெய்வங்களாகும். இவற்றைக் குல

வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும் 19

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---

பேசாம நிண்டா மீண்டும், மீண்டும் ஆடித் தெய்வம் சரியான காரணத்தை சொல்லும் இடையிலை வீட்டுக்காரர் விடுத்து விடுத்துக் கேட்பார்கள்.

# வீடுகளில் நடைபெறும் நாடகத்தன்மைபொருந்திய சில சடங்குகள்

தெய்வங்கள் எனவும், கும்ப தேவதைகள் எனவும் அழைப்பர்.

இவற்றுள் முக்கியமான தெய்வம் மாரி அம்மனேயாகும்.

வீட்டிலே ஒருவருக்கு தீராத நோய் ஏற்பட்டால் அல்லது அவ்வீட்டைக் கவலை பிடித்து உலுப்புமேயானால் மாரியம்மனுக்கு மடை வைத்து மாரி அம்மன் வந்து கோயிலில் ஆண்டுக்கொருமுறை ஆடும் ஒருவரை பிடித்துப் பூசாரியார் உதவியுடன் மாரி அம்மனை அவரில் வரவழைத்து அவர் மூலமாகத் தமது கஷ்டங்களுக்குரிய காரணங்களைக் கேட்டு நிவர்த்தியையும் கேட்பர்.

மிக நாடகத் தன்மை பொருந்திய அச்சடங்கின் சுருக்கத்தைத் தேற்றாத் தீவினைச் சேர்ந்த பூசகரும், வைத்தியரும், மாந்திரிகருமான நாலாயிரபிள்ளை அகிலேசபிள்ளை கூறியபடி அப்படியே கீழே தந்துள்ளேன்

இந்தபேட்டி 1980 களில் எடுத்த பேட்டியாகும், மாங்காட்டில் இது எடுக்கப்பட்டது. அக்காலத்தில் இவ்வீட்டு வழிபாடு பெருமளவில் இருந்திருக்கிறது.

“மடையெல்லாம் வைச்சி முடிஞ்ச உடனே மாரி அம்மனுக்கு ஆடுற ஆளுக்குமேல தண்ணி ஊத்தி உருக்கொடுப்பம். அதுக்கு மந்திரம் இது:

ஓம் சக்கர பூஷணி வா வா அம்மே
அருகில் கட்டிய சல்லடமும்
பட்டும் பட்டாடையும் அணிந்து
கொங்கை ஸ்தனமும் கொடியிடையுடனும்

ஈரேழு பதினாலு லோகமும் நின்றாடச் செய்தவளே.



அங்கயற் கண்ணம்மை தரிகிடதா தரிகிடதிம் தொந்தோமென்ன சிவனுக் தெரே நின்று திருக்கூத்தாடி நின்ற பராசக்தீ.

நான் நினைத்த இடத்தில் வருவேனென்று அன்று வரம் தந்த பராசக்தி இன்று வாடி அம்மா வா - சீக்கிரம் வாடி அம்மா சீக்கிரம் வாடி அம்மா.

இப்படி உருவேற்றினவுடனே தெய்வம் தலை சுற்றி ஆடத் தொடங்கும். கொஞ்ச நேரம் போனதும் பூசாரி கேப்பார்;

பூசாரி : இந்தப் பூமரத்தில் நிண்டு தலை சுத்துகிறது ஆர்?

ஆடுபவர் : நான்தான்டா மாரி அம்மன்.

பூசாரி ! அப்படியெண்டா தாயே; உண்ட விளையாட்டைக் காட்டு.

(எண்டு கதச்சுப் போட்டு உடுக்கெடுத்து மாரி அம்மன் பாட்டப் பாடுவார்)

. பூசாரி : எழும்பன், எழும்பனம்மா அகோரமாரி - தாயே ஏகாந்த மேடை விட்டு அகோரமாரி.

மற்ற பூசாரி ;ஓடி வரவேணும் மம்மா அகோரமாரி - தாயே ஒரு குறையும் வையாமல் அகோரமாரி.

பூசாரி : தாயே காந்தரியே அகோரமாரி - தாயே சடாச்சரியே வாரும் அம்மா அகோரமாரி. (இப்படி மாரி அம்மன் பாட்டக் கொஞ்சநேரம் பாட, மாரி அம்மனுக்குரிய முறையில் ஆடுறவர் சந்தோசமாக விளையாடி ஆடுவார். பிறகு அவர் தலை சுத்திக் கேப்பார்).;;

ஆடுபவர் : மகனே;

பூசாரி தாயே;

ஆடுபவர் : ஏண்டா என்னக் கூப்பிட்டா?

பூசாரி : முதல்ல உனக்கு வச்சமடைய எடு.

ஆடுபவர் : (நன்றாக ஆடியபிறகு) இந்தாடா (எடுத்துக் கொடுப்பார்). (அதற்குரிய மடை எடுத்தாத்தான் அது மாரி எண்டு நாங்க நம்புவம்). பூசாரி (பிறகும் கொஞ்ச நேரம் மாரி அம்மன் தாலாட்டுப் பாடின பிறகு), தாயே, இந்த மண்டி மனைகளில இருக்கிற குறைகளைக் கண்டு பிடிச்சு சொல்லு. (மண்டி மனை களில் பேயாயிருக்கும் அல்லது நோயாயிருக்கும் அல்லது குடும்பப் பிரச்சனைகளாயிருக்கும் அல்லது களவு போன தாயிருக்கும் அல்லது மருந்து, வசியம், சூனியம் இவை களாயிருக்கும்). ஆடுற தெய்வம் இதுதான் எண்டு விளக்கும்.

அது சொல்லுறது சரி எண்டா ஒத்துக் கொள்ளுவாங்க. பிழையெண்டா இல்லை எண்டுவாங்க. அல்லது பேசாம நிற்பாங்க.

தெய்வம் யோசிச்சி யோசிச்சி அதற்கான விடைகளைச் சொல்லும். உதாரணமாக சூனியம் அல்லது நோய் எண்டா பூசாரியார் கேட்பார்.

பூசாரி : இது எத்தனை நாளைக்குள்ள தீரும்.

தெய்வம் : இத்தனை நாள் எண்டு சொல்லும்.

பூசாரி : இது ஏன் வந்தது? இது தீர என்ன செய்ய வேணும் தாயே.

தெய்வம் : மகனே (எண்டு கூப்பிட்டு)




(பள்ளயம் கொடுக்க வேணும் எண்டு சொல்லும்). அல்லாட்டா ஆடு, கோழி, பலிகொடுக்க வேணும் எண்டு சொல்லும். அல்லாட்டா முந்தி வீட்டில் சடங்கு செய்ததிலை பிழை. நல்லா இன்னொருதரம் செய்ய வேணும் எண்டு சொல்லும்.

எனவே இது நிவர்த்தி பண்ண நேர்ந்து கட்டச் சொல்லும்.

பூசாரி வேப்பம் பத்திரம் தண்ணியும் வீட்டுத் தலைவன்ரை கையில கொடுக்க அவர் தான் அப்படியே செய்வதாக ஒத்துக்கொண்டு தெய்வத்துக்குத் தாரை வார்த்துக் கொடுப்பார்.)

(தொடரும்)

---

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## படுவான்கரைப் பெண்கள் சாதனையாளர்களே!



மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள படுவான்கரைப்பிரதேசத்து பெண்கள் சாதித்தவை ஏராளம் ஆனால் அவை பலருக்கு தெரிவதில்லை. என்ற ஆதங்கத்தினை கமலாம்பிக்கை வெளிப்படுத்திக்கொண்டிருந்தாள்.

கமலாம்பிக்கையும், ஞானேஸ்வரியும் அம்பிளாந்துறைப் பாதைக்காக காத்திருந்தனர். பாதை வருவதற்கு நேரம்சென்றமையினால். அவ்விடத்தில் இருந்து கொண்டு இருவரும் பேச ஆரம்பித்தனர்.

நமது படுவான்கரைப் பெண்கள் சாதித்த சாதனைகள் தற்போதுள்ள சமுகத்திற்கோ, வெளிச்சமுகத்திற்கோ தெரியவில்லை. ஒருசிலருக்கு மாத்திரம் தெரியக்கூடும். சாதனைப்பெண்கள் என்றால் மட்டக்களப்பில் படுவான்கரைப்பெண்கள்தான், இவர்கள் சாதிக்காத துறைகள் இல்லை என்று கூறுமளவிற்கு எல்லாத்துறைகளிலும் வியாபித்திருந்தனர். பலரை வாழ வைப்பதற்காக உயிரையே தியாகம் செய்தவர்கள் படுவான்கரை பெண்கள். இந்த உணர்வு எத்தனைபேருக்கு ஏற்படும், இதற்கு ஈடுஇணையான வேறு பொதுநலசிந்தனை இருக்கவே முடியாது. பலரும் சுயநலத்துடன் இருக்கையிலே படுவான்கரைப் பெண்கள் பொதுநலத்துடன் செயற்பட்டனர். இதனால், இவர்களின் வெயிலில் பலர் குளிர்காய்ந்து கொண்டு இன்று தம்மை சாதனையாளர்களாக காட்டிக்கொண்டிருக்கின்றனர். கல்வியில் உயர்ந்தவர்களாக பெருமைப்பட்டுக்கொள்கின்றனர்.

பலரை வாழ வைப்பதற்காக அன்புடன் அரணவணைத்து வயிறாற உணவளித்த படுவான்கரைப்பெண்களின் சாதனைகளை பெரும்பாலும் பேசுவது மிகக்குறைவு. சாதனையென்பது கல்வியில் உயர்பதவி வகிப்பதுதான் என பார்க்கின்ற சிந்தனையாளர்களும் பலர் உளர். அதனால்தான் படுவான்கரைப் பெண்களின் சாதனைகள் வெளிப்படுத்தப்படவில்லை. என்கின்றாள் கமலாம்பிக்கை.

**படுவான் பாலகன்**

பெண்கள் என்றாலே காலையில் நேரத்திற்கு எழும்புவள், இரவில் நேரம்சென்று தூக்குபவள். இவளுக்கு காலை தொடக்கம் இரவு தூங்கும் வரைக்கும் தொடர்ச்சியான வேலைகளே. அதனால் இவளின் வேலைகளை பெரிதாக தூக்கிப்பார்ப்பதில்லை. அம்மா வீட்டில் என்ன செய்கின்றாள் என்று கேட்டால், சும்மாதான் இருக்கின்றாள் என்ற பதிலைதான் பலரிடத்தில் வெளிவரும். அம்மா செய்யும் வேலைகளை அட்டவணைப்படுத்தினால் இத்தனை வேலைகளை ஒருபெண் செய்கின்றாளா? என்ற சந்தேகமும் ஏற்படும். ஆமை ஆயிரம் முட்டைகளை இட்டுவிட்டு பேசாமலே இருந்துவிடும். கோழி ஒரு முட்டையை இட்டுவிட்டு கொக்கரித்தே திரியும். அதேபோலதான்


தொடர்ச்சி... (பக்கம் -15 )

## மூதாதையரின் காலடிகள்

## கன்னியா

# மட்டக்களப்பு ஆடகசௌந்தரியின் பெண்கள் படை தரித்த இடம்

## கறி மூடி மலையும் பெண்டுகள் சேனையும்



வரலாற்றின் மூலங்களும் தொல் நில வாழ்விடங்களும் குன்றுகளிலும் குகைகளிலும் புதைந்து கிடக்கும் வரலாறு உலகம் முழுமைக்கும் பொதுவான பண்பு.

இலங்கையில் மட்டக்களப்பு படுவான் கரையில் குடும்பி மலை ஈழத் தமிழர்களின் வரலாற்று தொல்லிடமாக அறியப்பட்டுள்ளது. இதைப் போலவே கறி மூடியை ஒத்த வடிவிலான குன்று சேனையூருக்கு கிழக்கே பழந்தமிழர் வாழ்வை சுமந்தபடி உறங்கிக் கிடக்கிறது.

சேனையூருக்கு கிழக்காக சேனையூர் ஆற்றைக் கடந்து அக்கரை சென்று குன்றின் நிமிர்வு பசுமையாய் நம்மை வரவேற்கும் மலையை அதன் சரிவுகளில் ஏறி அதன் சாரல் அகலமான செங்கற்களும் அதனோடு



குன்றுகளில் முதுமக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்களை காணமுடியும்.

பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

சேர்ந்த கல் அடையாளங்கள் செதுக்கப்பட்ட படிகள், நீண்ட கல் படுக்கைகள் என்பனவும் கறுப்பு சிவப்பு மட்பாண்ட சிதைவுகளும் பல்லாயிரம் வருச வரலாற்றை உணர்த்தி நிற்கின்றன.

சேனையூரில் வாழ்ந்த காளிமுத்து சாமியார் அடிக்கடி காணாமல் போய் விடுவதுண்டு பல நாட்களின் பின் அவர் ஊருக்குள் வரும் போது சாமியார் இவ்வளவு நாள் எங்கு போனீர்கள் என்றால் நான் கறி மூடி மலையில் இருந்தேன் என்பார். அங்கு என்ன செய்தீர்கள் என்று கேட்கும் போது என் சொந்தக்காரர்கள் இருக்காங்க என்பார்; அந்த நாட்களில் மர்மங்கள் நிறைந்த மலையாகாகவே அது விளங்கியது. யுத்த காலத்தில் பல இளைஞர்களின் உயிர்களை காப்பாற்றியது இந்தக் கறி மூடி மலையே.

கறி மூடி மலையை அடுத்து இன்னுமொரு சிறிய குன்றாய் நிலைத்து நிற்பது தோணிக் கற்சுனை மலை. இந்த மலையும் வரலாற்று புதையல்கள் மிக்கதே. தோணி வடிவிலான கற்சுனை, இங்கு கோடை காலத்திலும் வற்றாத நீரூற்றாய் நிறைந்து நிற்கும். இங்கும் தொல் தமிழர் குடியிருப்புகள் வாழ்ந்ததற்கான தடயங்கள் காணப் படுகின்றன.

இந்த இரண்டு மலைகளை அண்டியே பெண்டுகள்சேனை எனும் பரந்த சிறுவெளி காணப்படுகிறது.

குளக்கோட்டு மன்னனோடு போர் புரிய வந்த ஆடக சௌந்தரி தன் பெண்கள் சேனையை இங்கு அணி வகுத்து யுத்தத்துக்கு தயாரானதாலேயே இவ்விடம் பெண்டுகள் சேனை என அழைக்கப்பட்டதாக ஒரு கதை உண்டு. ஒரு பக்கம் குன்றுகளும் மறுபக்கம் ஆறும் என எதிரிகள் இலகுவில் புக முடியா அரண் மிக்கதாக இருந்திருக்கின்றது என்பதை இப்போது பார்த்தாலும் புரிந்து கொள்ள முடியும்.

யுத்தம் கடுமையாக நடந்த காலங்கள் மக்கள் பெருமளவில் தஞ்சம் அடைந்த இடமாக இது இருந்திருக்கிறது என்பது அண்மைய வரலாறு.

மலைகளிலும் குன்றுகளிலும் ஆற்றோரங்களிலும் நம் வரலாற்றின் மூலங்களைத் தேட முடியும்.

---

# எளிமையின் ஆழம் சூரியா பெண்கள் அமைப்பினர் கொண்டாடிய சர்வதேசப் பெண்கள் தினம்

இன்று காலை சூரியா பெண்கள் அமைப்பினர் தாம் கொண்டாடும் பெண்கள் தின விழாவில் கலந்து கொள்ளுமாறு எனக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.


சூரியா பெண்கள் அமைப்பு சுனிலா அபயசேகர, சித்திரலேகா, குமுதினி சாமுவேல் ஆகியோரால் இலங்கையின் நெருக்கடியான ஓர் கால கட்டத்தில் 1991 இல் ஆரம்பிக்கப்பட்டது.

அது ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து அதனோடு எனக்கு நெருக்கமான தொடர்பும் உறவும் இருந்து வருகிறது.

ஆரம்பத்தில் இதில் தீவிரமாக இயங்கிய ஜயந்தி, விஜி, ஸ்ரீவள்ளியம்மன், யமுனா இப்ராஹிம் ஆகியோர் தொடக்கம்அண்மைக்காலம் வரை இயங்கிய சரளா இமானுவல், இன்றுவரை இயங்கும் விஜயலக்சுமி, கேதீஸ்வரி வரைஅனைவரின் செயற்பாடுகளையும் அருகிலிருந்து அவதானித்து வந்துள்ளேன்.

அவர்களின் சில கலைச் செயற்பாடுகளுக்கு என்னாலான உதவிகளும் புரிந்து வந்துள்ளேன். நேர்மையும் உண்மையும் சமூக அநீதிக்கெதிரான போர்க்குணமும் கொண்டவர்கள் சூரியாப் பெண்கள்.

“பெண்”எனும் அவர்கள் வெளியிடும் சஞ்சிகை, அவர்கள் வெளியிட்ட கதை, கவிதை நூல்கள், ஆவணங்கள் என்பன முக்கியமானவை.



வஞ்சிக்கப்பட்ட பெண்கள், ஆதரவு தேடி, ஆலோசனைகள் வேண்டி வரும் புகலிடம் சூரியா.

சூரியா கலாசாரக் குழுவினர் சிறப்பான ஆற்றுகையாளர்கள் சிறந்த பயிற்றுவிப்பாளர்களின் கீழ்ப் பயிற்சி பெற்றவர்கள்

செற்பாட்டுத் தன்மைகள் மிகுந்த நிறுவனம் சூரியா நிறுவனம்.

அவர்கள் மயிலம்பாவெளி கிராமத்தில் உள்ள தமது மனச்சோலை எனும் இடத்தில் இவ்வருட பெண்கள் தினத்தைக்கொண்டாடினர்.

சூரியாவுக்கு நெருக்கமானோரும் முக்கியமாகக் கிராமப்புறப்பெண்களும் அதில் கலந்துகொண்டனர்.

அரசாங்க அதிகாரிகளையோ அரசியல்வாதிகளையோ அங்கு காணவில்லை.

பெண்ணியச் செயற்பாடாளர்களே அங்கு உரையாற்றினர்.

இன்று நடைபெற்ற பெண்கள் தின விழாவில் அதன் ஸ்தாபகர்களில் ஒருவரும் பெண்ணிய மனித உரிமை வாதியுமானசுனிலா அபயசேகரா நினைவு கூரப்பட்டார்.

அவரைபற்றிய அழகும் உருக்கமும் ஆழமும் நிறைந்த உரைகளை முறையே சரளாவும் சித்திரலேகாவும் நிகழ்த்தினர். சூரியா கலசாரக்குழு நடத்திய நாடகங்களின் தொகுப்பான “மட்டுநகர்க் கண்ணகிகள்” எனும் நாடக நூலை

அந்நாடகங்களை முன்னர் வந்து இங்கு பழக்கிய மங்கை அரசு வெளியிட்டு வைத்தார்.

ஊஞ்சல் ஒன்று கட்டி பெண்கள் அதில் ஏறி ஆடிப்பாடி மகிழ்ந்தனர் நாமும் அவர்களுடன் குழந்தையாகி ஊஞ்சலாடி மகிழ்ந்தோம்

பேராசிரியர் யோகராஜா , பேராசிரியர் தியூடர்சில்வா, கலாநிதி தர்சன் அம்பலவாணர், கலாநிதி முர்சித், நிர்மலவாசன்போன்ற பல ஆண்களும் கலந்துகொண்டனர். கலசாரக் குழுவினரின் ஆற்றுகை மனம் கவர்ந்தது. அவர்கள் கூறிய‘சமுதாயத்தின் நிசப்தமோ பயங்கர இரைச்சலாய் என் நிம்மதியைக் கெடுக்கிறது’ என்ற ஆழமான கவிதை வரிகள் எமது நிம்மதியையும் கெடுத்தன

பேராசிரியர் சி. மௌனகுரு

பெரிய மேடை இல்லை, ஒப்பனை இல்லை, இசை வாத்தியங்கள் கூட இல்லை. எளிமையான இசையில் அவர்களது எளிமையான ஆற்றுகை மிக ஆழமானதாக அமைந்து மனதை ஈர்த்தது. அது எளிமையின் ஆழம். கடந்த 21 வருடங்களாக பல சவால்களுக்கு மத்தியிலும் சவாலுக்குச் சவாலாக நிமிர்ந்து நிற்கிறது சூரியா. அவர்கள் கொண்டாடிய பெண்கள் தினம் பெண்களின் பிரகடனமாக,

பெண்களின் கொண்டாட்டமாக, அர்த்தபூர்வமானதாக அமைந்து மனதை நிறைத்தது.

(படம் : சூரியா பெண்களால் திறந்து வைக்கப்பட்ட சுனிலா அபயசேகராவின் படம். இது ஓவியர் நிர்மலவாசனால் வரையப்பட்டது)

# முருகபூபதியின் சொல்லத்தவறிய கதைகள்

**(மட்டக்களப்பில் அரங்கம் கேட்போர் கூடத்தில் நடந்த "சொல்லத்தவறிய கதைகள்" நூல் அறிமுக நிகழ்ச்சியில் ஆற்றப்பட்ட நிலாந்தியின் நயவுரை - ஆசிரியர்)**



எழுத்தாளரும் ஊடகவியலாளருமான முருகபூபதி காலத்தில் தான் நாமும் வாழ்கிறோம் என எண்ணும் போது மிகுந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்ளும் அதேவேளை இந்நூலை வாசிக்கக் கிடைத்தமையையிட்டு பூரிப்புக் கொள்கிறேன். முருகபூபதி ஐயாவைப் பற்றிச் சொல்லும் அளவிற்கு எனக்கு வயசும் அனுபவமும் போதாது இருப்பினும் அவரது சொல்லத் தவறிய கதைகள் நூலினை வாசித்த ஒரு வாசகி என்ற வகையில் சிறு கருத்துரையை வழங்கலாம் என நினைக்கிறேன்.

“மகிழ்” பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் சொல்லத் தவறிய கதைகள் நூலை நான் ஒரு ஆவணத் தொகுப்பாகவே பார்க்கின்றேன். பத்தி உருவில் எழுதப் பட்டிருந்தாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வரலாற்றுப் பதிப்பாகவே பதிவாகியிருக்கின்றன. அவர் ஒரு இலக்கியவாதியாகவும் ஊடகச் செயற்பாட்டாளராகவும் இருப்பதனால் இவ்வெழுத்துக்கள் உண்மைத்தன்மை நிறைந்து வாசிப்பைத் தூண்டுவதுடன் பத்தியின் நகர்வு சுவாரசியத்தையும் ஆவலையும் தூண்டி நிற்கின்றன என்றால் மிகையாகாது. அத்துடன் ஒவ்வொரு பத்தியிலும் அவரது சமூக அக்கறையையும் சமூகம் சார்ந்த விமர்சனத்தையும் முன் நிறுத்தி இருப்பதை காணக்கிடைக்கின்றது.

புலம்பெயர் நாடுகளில் எது செய்தாலும் குற்றமாகப் பார்க்கப்படும் சூழல், ஒரு சிறிய காரணம் கூட பெரிய குடும்பப் பிளவுக்கு வழி அமைப்பதை “அடிக்கிற கைதான் அணைக்கும்” என்ற பத்தி சொல்லி நிற்கிறது. “மறைந்தவர்களின் தொலைபேசி இலக்கங்கள்” என்ற பத்தியை வாசிக்கையில் என்னிடம் இருந்த ஒரு டயரி நினைவில் வந்து போனது . அதில் உள்ள ஒவ்வொரு இலக்கங்களும் ஒரு கதை சொல்லும் என்பதை அருமையாக பதிவு செய்திருந்தார் அவர். ஊடகத்துறையில் பணி செய்கையில் உள்ள சிக்கல்களையும் அவற்றை சமாளிக்கப்பட்ட பாட்டினையும் அறிகையில் மிகவும் சிலிர்ப்பாகவும் வியப்பாகவும் இருக்கின்றது. அச்சுக் கோர்ப்பதில் உள்ள பிரச்சினைகளும் அது எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதையும் சுவாரசியமாகக் கூறிச் செல்கிறார். மேலும் ஊடகவியலாளருக்குத் தோன்றும் சந்தேகங்களும் மனவுளைச்சலும் பல கேள்விகளாக வெளிப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. அக்கேள்விகள் எக்காலத்திலும் எந்நாட்டிற்கும் பொருந்தக்கூடியதாக இருப்பதை என்னால் உணரக்கூடியதாக இருந்தது. “பத்து வயதில் ஆடிய கரகாட்டம்” எனும் பத்தியில் அவரது ஆசிரியர்களின் கண்ணியமும் அவர்கள் பிள்ளைகள் மேல் கொண்டிருந்த நம்பிக்கையும் நெகிழ்ச்சியாக இருந்தன. கலை கலை எனச் சொன்னாலும் அவற்றில் மறைந்து கிடந்த சாதீய அரசியலை நாம் புரிந்து கொள்வதில்லை அதுவே



அனைத்துக் கலைகளையும் அனைவரும் கற்றுத் தேற தடையாக இருந்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது. இப்பத்தியின் முன் பகுதியில் கூறப்பட்டிருக்கும் கரகத்தின் தாற்பரியம் மிகச் சுவாரசியமான உண்மை. ‘கலைஞர்கள் துவண்டு விடக் கூடாது பரிசுகள் வெறும் அங்கீகாரம் தான்’ என்று கரகாட்டக் கலைஞர் சாமி அவர்களின் கூற்று முற்றிலும் உண்மையே. இக்காலக் கலைஞர்கள் உணர வேண்டியதொன்றாக இதனைக் கூறலாம்.

கலவரங்களும் கண் துடைப்புகளும் எனும் பத்தியில் இலங்கைக் கலவரங்களை கண்

நிலாந்தி சசிகுமார்

முன்னே படம் பிடித்துக் காட்டும் அவரின் விபரிப்புகளை என்னவென்பது அருகில் இருந்து பார்த்து உணர்ந்த மனநிலையை தந்து விட்டார். அதில் அரசியல் சூழ்ச்சிகளை பட்டும் படாமலும் தொட்டும் தொடாமலும் சொல்லி எமது மூளைக்கு வேலை கொடுக்கிறார். அதேவேளை கலவரங்களினால் பாதிப்புக்குள்ளானது இலங்கையின் பொருளாதாரமும் பொது மக்களுமே என்பதுடன் அவசியமற்றதும் அர்த்தமற்றதுமாகும் என்பதை அழகாகவும் ஆணித்தரமாகவும் சொல்கிறார்.

தமிழ் பேசும் மக்கள் என்பதில் தமிழரும் முஸ்லிம்களும் அடங்கினாலும் ஏதோ ஒரு உட்பூசல் இருந்து கொண்டே இருப்பதை உணரும் சந்தர்ப்பங்கள் நம் வாழ்வில் அதிகம் நடந்துள்ளன. ஆனால் இலக்கிய உலகில் இன வேறுபாடு என்பது தாக்கத்தை ஏற்படுத்தவே இல்லை என்பதுடன் இன மத வேறுபாடு இல்லாத ஒற்றுமையை வளர்ப்பது இலக்கியம் என்பதை சிங்கள இலக்கியங்களை தமிழுக்குத் தந்த முஸ்லிம் சகோதரர்கள் என்ற பத்தியின் மூலம் உணரலாம்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

---

# கிழக்கிலங்கையில் கைவினைக் கலைகள் (பகுதி 4)



## சிப்பி கைவினைகள்

இயற்கையாகவே கிடைக்கும் சிற்பிகள் மூலம் கைவினைப் பொருட்களை உருவாக்குவதில் கிழக்கின் திருகோணமலை மாவட்டம் முன்னிற்கின்றது. குறிப்பாக தமிழ், சிங்கள மக்கள் தமது படைப்பாற்றலை இக்கைவினை ஊடாக வெளிக்காட்டுகின்றனர்.

கடலோரங்களில் கிடைக்கும் சிப்பிகள் பொறுக்கப்பட்டு, பொருத்தமானவைகள் இனங்காணப்பட்டு, கைவினைப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. பெரும்பாலான உற்பத்திகளுக்கு சோடியான சிப்பிகள் தேடி எடுக்கப்படுகின்றன.

சிறிய கம்பிகள் துணை கொண்டு பறவைகள், மீன்கள், மிருகங்கள், பூக்கள் மற்றும் கடவுள் உருவங்கள் என்பன மேசையில் வைக்கும் வகையில் சிப்பிகளால் படைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. இவை தவிர சுவர் அலங்காரக் கொழுவிகள்,

ஆ.யு. நூருல் அஸ்மாஹ்
கல்முனை

அலங்கார மணிகள் என்பனவும் சிப்பிகளால் செய்யப்படுகின்றன. சிப்பிகளை ஒட்டுவதற்கு Glue stick என்னும் பசையும், வேறு சில பசைகளும் பயனபடுத்தப்படுவதோடு, சில வேளைகளில் வார்னிஷ் பூச்சும் பாதுகாப்பிற்காகப் பூசப்படுகின்றது.

மாட்டுக்குட்டி எனப்படும் ஒரு வகை சிப்பி, ஊரி, சில கடற் பிராணிகளின் ஓடுகளும் சிப்பிக் கைவினையில் பயன்படுத்தப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவரும் ஒரு கைவினையாக சிப்பிக் கைவினைகள் அமைவது விஷேடமாகும்.

## பனை கைப்பணிகள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பலபகுதிகளில் பனையிலான கைவினைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக விசிறி, பெட்டி, கூடைகள், பூச்சாடிகள், விளையாட்டுப் பொருட்கள், சுவர் அலங்காரக் கொழுவிகள் போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

உற்பத்தி செய்யப்படும் கைவினைக்கேற்ப செய்முறையும், வேறுபடுகின்றது. விசிறி செய்வதற்காக 2 பனை ஓலைகள் ஒன்றன் மேல் ஒன்றாக வைத்துக் கட்டி அலங்காரங்கள் நூலினாலும், பனை ஓலையினாலும் இடப்படுகின்றன. பெட்டி, கூடை போன்ற கைவினைகளின் போது பனை ஓலை தேவையான அளவிற்கு வெட்டப்பட்டு பின்னப்படுகின்றன. பெட்டிகளின் விளிம்புகளுக்காக பனை மட்டைக் கீறல்களும் சில அலங்காரப் பொருட்களுக்காக பிளாஸ்ரிக் வயர்களும் பயன்படுத்தப்படுவதனைக் காணலாம். தேவைக்கேற்ப குறிப்பாக சிவப்பு, மற்றும் பச்சை நிறச் சாயங்களும் உபயோகிக்கப்படுகின்றன. நிறச் சாயமிடப்பட்ட கொதி நீரில் பனை ஓலையை இட்டு நன்கு சாயமேறிய பின் வெயிலில் காயவைத்து கைவினைக்கு ஏற்றவாறு தயாரிக்கப்படுகின்றன.

பெரும்பாலும் தமிழ், முஸ்லிம் மக்களே பன் கைப்பணிகளை செய்கின்றனர். மாகாணத்தின் ஏனைய பகுதிகளுக்கு இக்கைவினைகளை விற்பனை செய்வதற்காக வியாபாரிகள் வாங்குவதோடு, சில சந்தர்ப்பங்களில் உற்பத்தியாளர்களே நுகர்வோருக்கான நேரடி விற்பனையில் ஈடுபடுகின்றனர்

மேற் கூறியவை தவிர செம்பு, பித்தளை கைவினை உற்பத்திகள், சிரட்டையிலான கைவினைப் பொருட்கள், துணிகளில் வரைதல், தும்புக் கைவினைப்பொருட்கள் போன்ற பாரம்பரியமான கைவினைகளோடு மேற்கத்தியச் சாயல் மிக்க கடதாசியிலான கைவினைகள், தையல், அலங்காரக் கைவினைகள் போன்றவையும் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

நவீன நாகரிகங்கள் வந்த போதிலும் பாரம்பரியமான கைவினைப் பொருட்களுக்கான பெறுமதி குறையவில்லை. கிழக்கு மாகாணத்தின் கால நிலை, இனப்பரம்பல்கள் என்பன கைவினை உற்பத்திகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன.
இலத்திரனியல் உலகுக்குள் அமுந்திப் போகாமல், இலத்திரனியல், கணனி, பொறியியல், வைத்தியம் போன்றவை மட்டும்தான் மதிப்புமிக்க தொழில் என எண்ணாது எமது பாரம்பரியத்தையும், கலாசாரத்தையும் பேண இளைஞர் சமுதாயம் முன்வர வேண்டும் என்பதோடு கைவினைக்கலையை தரம் குறைந்ததாகப் பார்க்காமல் சுற்றுலாத்துறையை மையமாக வைத்து வருமானமீட்டும் வழிமுறையாகவும் மாற்றுவதோடு கைவினையாளாகளுக்கான அங்கீகாரத்தையம் வழங்க வழி சமைக்க வேண்டும். அத்தோடு இவ்வாறான கைவினைகளுக்கு சர்வதேச பெறுமதியும், உரிமையையும் அளித்து கைவினைக்கலையை முன்னேற்றுவது அவசியமாகும். இதற்கேற்றாற் போல் இக்கைவினைக் கலையை மையப்படுத்தி ஆவணப்படங்கள், விளம்பரங்கள், நூல்களை உருவாக்குவதும், கிராமியக் கைவினைகளின் போது உபயோகிக்கப்படும் பொழுதுபோக்குப் பண்களை எழுத்துருப்படுத்துவதும் காலத்தின் தேவையாகும்.

மேலை நாடுகளில் கைவினை யாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது போன்ற உயர் அங்கீகாரத்தையும் கைவினைக் கற்றல்களுக்கான நிலையங்களையும் தருவதோடு கைவினையாளர்களுக்கான நிதி வசதிகளையும் இன, பிரதேச ரீதியிலான கைவினைகளைப் பற்றிய அறிவைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகளையம் அரசு ஏற்படுத்த வேண்டும் என இக் கட்டுரை மூலம் பரிந்துரை செய்கின்றேன்.

கிழக்கு மாகாணத்தை அடையாளப் படுத்துவதில் கைவினைகள் சிறப்பிடம் வகிக்கின்றன என்பது மிகையாகாது.

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 27

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

சென்ற வாரங்களில் வினாத்தாள் I (தமிழ் I), வினாத்தாள் II (தமிழ் II) ஆகியவற்றில் வரும் கட்டாய வினாக்களுக்கான மாதிரி வினாக்களைப் பார்த்தோம். மேலும் பயிற்சிக்காக இவ்வாரம், வினாத்தாள் II (தமிழ் II)இல் வரும் வினா 2 (அ), (ஆ) பகுதிகளுக்கான வினாக்கள் தரப்படுகின்றன. இவை, மாதிரிவினாக்கள் என்பதைக் கவனத்திற்கொள்க.

2. (அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

மனிதனை ஏனைய மிருகங்களிடமிருந்து பிரித்துக்காட்டும் பண்பு, அவனுடைய சிந்திக்கும் ஆற்றலன்றி அவனுடைய மொழியாற்றலே என்னுங் கருத்து, தற்போது வலுப்பெற்று வருகிறது. கருத்து வெளிப்பாட்டுக்கு அடிப்படையாக அமையும் மொழியாற்றல் மனிதனுக்குக் கிடைத்த மிகச் சிறந்த கொடை என்றே கூற வேண்டும். இந்த மொழியாற்றல் மூலமாக மனிதன் உள்ளத்து உணர்வுகளை இசையூட்டிய சொற்களால் வெளிப்படுத்தும் போது அவனுடைய தனித்துவ ஆற்றலை நன்கு விளங்கிக்கொள்ளலாம். பறவைகள் இசையுடன் பாடுகின்றன. ஆனால், மனிதனைப் போல் அவை இசை கலந்த சொற்களால் பாடமுடியாது. பழங்கால மனிதனின் பாடல்கள் சிக்கலில்லாத இலகுவான ஓசையமைப்பினையுடையனவாகவே அமைந்தன.

பழங்கால மனிதர் தங்களுக்கேற்ற வகையில் இப்பாடல்களை அமைத்துக்கொண்ட போதிலும் அவை தற்கால இசைப்பாடல்கள் என்று கூறத் தக்க வகையில் எவ்வித விதிகளையும் பின்பற்றியனவாக அமையவில்லை. இவ்வாறு எளிமையும் பண்படாத தன்மையும் கொண்ட பாடல்களைப் பிற்காலத்திலே துறைபோய வல்லுநர் சிலர், பண்படுத்தி அவற்றுக்கு யாப்பமைதி, இசையமைதி ஆகியவற்றை இலக்கண வாயிலாகக் கூற முற்பட்ட போது செம்மையான தற்கால இசை தோன்றியது எனலாம். ஆகவே, கற்றவர் கையிலே சேர்ந்து பண்படுத்தப்பட்ட மக்கள் பாடல் ஒரு புறமும் கற்றவர்கள் பார்வைக்கு உட்படாத போதும் பெரும்பான்மை மக்களோடு பின்னிப் பிணைந்து, பண்படுத்தப்படாதனவாகிய மக்கள் பாடல்கள் இன்னொரு புறமும் இருக்கின்றன. இவற்றுள் இரண்டாவது வகையினையே நாம் இங்கு நாட்டுப் பாடல்கள் என்று கருதுகின்றோம். சாதாரண மக்கள் பாடும் பாடல்களாக நாட்டுப் பாடல்கள் அமைந்த போதிலும் அவற்றுள்ளே கவிதைக்குரிய ஒத்திசைவு, இலயம் ஆகியன காணப்படுகின்றன. இதற்குக் காரணம் இந்நாட்டுப் பாடல்கள் மக்களின் உண்மை உணர்வினை வெளிப்படுத்துகின்றமையேயாகும்

(13 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் உரைப்பகுதியைப் படித்து, அதன்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

“மாறுதல் இந்த ஜகத்தின் முதலாவது விதி” என்றார் மகாகவி பாரதியார். சமுதாயம், அரசியல், சமயம், மொழி, இலக்கியம், நடையுடைபாவனை முதலான பல்வேறு துறைகளிலும் மாறுதல்கள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. அத்தகைய மாற்றங்கள் எல்லாக் காலப்பகுதிகளிலும் நிகழ்ந்துள்ளனவேயாயினும், வரலாற்றைத் திரும்பிப் பார்க்குமிடத்து மாறுதல்களின் வேகம் எமது காலத்தில் மிகுந்து காணப்படுவதை அவதானிக்கலாம். மாறுதல் குறித்த, நோக்குக்கூடப் பெரிதும் மாறியுள்ளமையினைக் காணவியலும். பாரம்பரிய வழிமுறைகளை அப்படியே கடைப்பிடிக்கும் தன்மையும் புதியவற்றைக் கைக்கொள்வதில் துணிச்சற் குறைவும் ஆங்காங்கு தென்படினும் புதிய மாறுதல்கள் பெரும்பாலும் வரவேற்கப்படுகின்றன. வரவேற்கப்படாதவிடத்துத்தானும் மாறுதல்களின் தாக்கம் ஏற்படவே செய்கிறது.

புதிய கருத்துக்களையும் வல்லமைகளையும் தேடி வளர்க்கும் ஆர்வம், இக்காலத்தில் துலாம்பரமாக விளங்குகிறது. “பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் புத்தம் புதிய கலைகள்” மேலைத் தேயங்களில் வளர்வதைப் பார்த்த பாரதி, “சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்” என்று பாடவில்லையா? பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் இடம்பெற்ற மறுமலர்ச்சி, மனித வாழ்வில் முன்னேற்றம் காணும் பிரக்ஞைபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்குக் காலாயிற்று. இயற்கையை வசப்படுத்திப் பயன்படுத்தும் வேட்கை விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியினை வேகமடையச் செய்தது. அதன் விளைவான மாறுதல்களினால் பழைய பல பழக்கவழக்கங்களும் விழுமியங்களும் வலுவிழந்தன.

(i) இந்தக் காலத்தில் தெளிவாக விளங்கும் விடயமாக ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகின்றார்?
(ii) மாற்றம் தொடர்பான ஆசிரியரின் கருத்து யாது?
(iii) பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் இடம்பெற்ற மறுமலர்ச்சி, எதற்கு வழிசமைத்தது?
(iv) பழக்கவழக்கங்களும் விழுமியங்களும் வலுவிழந்தமைக்கு ஆசிரியர் கூறும் காரணம் என்ன?
(v) ஆசிரியர் தம் கருத்துக்களை நிலைபெறச் செய்ய பாரதியாரை எவ்விதம் துணையாகக் கொள்கிறார்?
(vi) பின்வரும் தொடர்களின் பொருளைச் சுருக்கமாக விளக்குக.
(1) பாரம்பரியம் (2) பிரக்ஞைபூர்வமானது

(12 புள்ளிகள்)

(13+ 12 = 25 புள்ளிகள்)

# கற்போம்

## உயிர் அங்கிகளின் மூலக உள்ளடக்கம்


குணம் சவரிராஜா

02 தொடர்ச்சி...

42. இலிப்பிட்டுக்களின் மூன்று முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக.
- நீர்வெறுப்புக்குரிய மூலக்கூறுகளின் பல்வகைமையான கூட்டம்.
- பல்பகுதியங்களாகவோ அல்லது மாமூலக்கூறுகளாகவோ கருதப்படமுடியாத பெரிய உயிரியலுக்குரிய மூலக்கூறுகள்.
- C,H,O ஆல் ஆனவை. அத்துடன் H:O, 2:1 ஆக இருப்பதில்லை. ஒப்பீட்டளவில் கூடிய H காணப்படும்.

43. உயிரியலுக்குரிய முக்கிய இலிப்பிட்டுக்களின் வகைகள் மூன்றினைத் தருக.
1. கொழுப்புகள்
2. பொஸ்போலிப்பிட்டுக்கள்
3. ஸ்ரீரொயிட்டுகள்.

44. கொழுப்புகளின் கட்டமைப்பை விபரிக்க.
- கொழுப்புக்கள் கிளிசரோலினாலும் கொழுப்பமிலங்களாலும் ஆக்கப்பட்டவை.
- கிளிசரோல் 3 காபன்களைக் கொண்ட அற்ககோல் கூட்டத்தைச் சேர்ந்தது.
- அங்கு ஒவ்வொன்றும் ஓர் தனியான ஐதரொட்சைல் கூட்டத்தைக் கொண்டிருக்கும்.
- கொழுப்பமிலங்கள், ஒரு முனையில் ஒரு காபோட்சில் கூட்டத்தைக் கொண்ட நீளமான (16-18) காபன் வன்கூட்டுடனான எசுத்தர் பிணைப்பால் கிளிசரோலின் ஒவ்வொரு ஐதரொட்சைல் கூட்டத்துடனும் பிணைத்தலை மேற்கொள்ளுகின்றன.
- இதன் பேறாக உண்டாகும் கொழுப்பு மூலக்கூறு் திரைஅசைல்கிளிசரோல் (triacylglycerol) என அழைக்கப்படுகின்றன.





- கொழுப்பமிலங்களின் ஐதரோகாபன் சங்கிலிகள் கொழுப்புக்களின் நீர்வெறுப்புக்குரிய இயல்புக்கான பங்களிப்பை வழங்குகின்றன.

45. கொழுப்பமிலங்களினது ஐதரோகாபன் சங்கிலிகளின் தன்மையைப் பொறுத்து அவை நிரம்பற் கொழுப்புக்கள் என்றும் நிரம்பாக் கொழுப்புக்கள் என்றும் கூட்டமாக்கப்படுகின்றன. நிரம்பற் கொழுப்புக்களை நிரம்பாக் கொழுப்புக்களில் இருந்து வேறுபடுத்துக

நிரம்பற் கொழுப்புகள் -
- நிரம்பற் கொழுப்புக்கள் எந்தவிதமான இரட்டைப் பிணைப்புக்களையும் கொண்டிராத ஐதரோகாபன்களையுடைய, நிரம்பலடைந்த கொழுப்பமிலங்களால் அக்கப்பட்டவை.
- பொதுவாக விலங்குக் கொழுப்புக்கள் இந்தப் பிரிவின் கீழேயே வருகின்றன. அவை அறை வெப்பநிலையில் பெரும்பாலும் திண்மமானவை. உ + ம். வெண்ணெய்

நிரம்பாக் கொழுப்புகள் -
- நிரம்பாக் கொழுப்புக்கள் நிரம்பலடையாத கொழுப்பமிலங்களால் ஆக்கப்பட்டவை.
- கொழுப்பமிலங்கள் ஒன்று அல்லது கூடிய இரட்டைப் பிணைப்புக்களையுடைய ஐதரோகாபன்களைக் கொண்டிருக்கும்.
- தாவரக் கொழுப்புக்கள் பொதுவாக இப் பிரிவின் கீழே வருகின்றன. அறைவெப்பநிலையில் பெரும்பாலும் அவை திரவமாகக் காணப்படும்.
- இரு வகையான நிரம்பாக் கொழுப்புக்கள் உண்டு.
  a. Cis நிரம்பாக் கொழுப்பு b. Trans நிரம்பாக் கொழுப்பு
- மேலதிக நிரம்பற்கொழுப்புக்களையும் trans நிரம்பாக் கொழுப்புக்களையும் நுகர்தலானது நாடிதடிப்படைதல் நிலைமைக்குப் பங்களிப்புச் செய்கின்றன.

**நிரம்பற் கொழுப்பினதும் நிரம்பாக் கொழுப்பினதும் கட்டமைப்புகள்**




பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

தொடர்ச்சி...

## முருகபூபதியின் ...

புத்தரின் மதம் போதித்த அன்பும் புத்த பிக்குகளின் வாழ்க்கை முறையும் இக்கால கட்டத்தில் பெரியளவில் மாற்றத்தைக் கண்டுள்ள நிலையைக் காண்கின்றோம் ஆனால் வாய்விட்டுச் சொல்லும் தைரியம் யாருக்குமே இல்லை. ஊடகத்துறையில் பணியாற்றுபவர்களுக்கு இருக்கும் அந்த துணிச்சலை இப்பத்தியில் காணக்கூடியதாக இருந்தது.

புத்தகங்கள் என்ன குற்றம் செய்தன? என்ற பத்தியை வாசிக்கையில் புத்தகங்கள் மேல் காதல் கொண்ட எவருக்குமே கண்களும் மனமும் கலங்கி நிற்கும். வாசிப்புப் பழக்கம் எழுதத் தூண்டக்கூடியது என்பதை ஒவ்வொரு எழுத்தாளரும் உணர்ந்த விடயமே. அதே போல் புத்தகம் காவி, புத்தகப்புழு, புத்தகப்பூச்சி என்ற பட்டங்கள் புத்தக விரும்பிகளின் கௌரவப் பட்டங்கள் போன்று பெருமை கொள்ளச் செய்யும் ஒன்று. அதை நூலாசிரியரும் அனுபவித்திருப்பார். சாதீயச் சதியும் பார்ப்பனிய சமூகப் பின்னணியும் பல தலைவர்களை மாயமாக்கியுள்ளமையை ஆணித்தரமாகக் கூறிச் செல்கிறது விடுதலைப் போர்; உறைபொருளும் மறை பொருளும்.

மேலும் அச்சியந்திர கோளாறுகள் மற்றும் அதன் பாதிப்புகளும் குறித்து எழுத்துலகில் சனிபகவான் எனும் பத்தியில் நகைச்சுவை கலந்து கூறியுள்ளார் நூலாசிரியர், புகையிலையின் வாசம் பேசும் பத்தி, பிரேமாவதியின் படுகொலையின் பரிதாபங்கள், நீர்கொழும்பின் வரலாறு, அரசியலில் நுழைந்த தேங்காய் என ஒவ்வொரு பத்தியும் ஒவ்வொரு சரித்திரம் கூறின. நடுவழியில் இன்ப அதிர்ச்சி எனும் பத்தி என்னை சற்று அதிர்ச்சிப்படுத்தியது. தனி ஈழம் கேட்பது குறித்தான கேள்வி பதில் அபாரம். பத்தியை ஆரம்பிக்கையில் ஒன்றைத் தொடங்கி அதன் பின் தொடர்ச்சியாக தன் அனுபவத்தைக் கூறி, கதை சொல்லியாக மாறி, பத்தியை நகர்த்திச் செல்லும் விதம் அற்புதம். மூத்தோரிடம் அனுபவங்களைக் கேட்கையில் ஏற்படும் களிப்பு இந்நூலை வாசிக்கையில் ஏற்படுவதை யாராலும் மறுக்க முடியாது .

தொடர்ச்சி...

## இரா.உதயணன் இலக்கிய விருது...

சொந்தக்காரன். பாடலாசிரியர். வாழைச்சேனை காகித ஆலையில் எழுதுவினைஞராக கடமை புரிந்த இவர், ஓய்வின் பின்பும் எழுதிக்கொண்டு இருப்பவர். பழகுவதற்கு இனியர். இவரை வாழ்த்துவதில் மகிழ்வு கொள்கிறோம். இவ்வாறு இலக்கியவாதிகளுக்கு இலங்கை, இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் இணைந்து வழங்கும் கௌரவத்தை பெற்றுக் கொள்ளும் இம் மூன்று மண்ணின் மைந்தர்களையும் வாழ்த்துகிறோம். அத்துடன் மலையக இலக்கியத்தின் உயிர் மூச்சாய் திகழும் அந்தனி ஜீவா, நாடகக் கலைஞர் கலைச்செல்வன், எழுத்தாளர் துரை சிங்கம் ஆகியோரும் வாழ்நாள் சாதனையாளர் விருது பெறுகிறார்கள், அவர்களையும் கனம் பண்ணுகின்றோம்.

சிறந்த ஊடகவியலார் விருது பெறும் மூத்த ஊடகவியலார் பொ.மாணிக்கவாசகம், உயர் இலக்கிய விருது பெறும் அருணா செல்லத்துரை ஆகியோருக்கும் விருது பெறும் ஏனைய படைப்பாளிகளுக்கும் வாழ்த்துக்கள்.

தொடர்ச்சி...

## படுவான்கரைப் பெண்கள் சாதனையாளர்களே!

பெண்களும் பல வேலைகளை வீட்டிலே செய்துவிட்டு அமைதியாக இருந்துவிடுகின்றனர். இங்கு ஆண்களை மட்டுமே வேலை செய்பவர்களாக காட்டிக்கொள்கின்றனர். இதனை கமலாம்பிக்கை ஏன் சொல்ல வருகின்றாள் என பலருக்கு தோன்றும். அவள் கூற விழைந்தது, படுவான்கரைப் பெண்களின் சாதனைகளும் அளப்பெரியதுதான் அவை வெளிப்படுத்தப்படவில்லை என்பதே கவலைக்குரியது.

வைத்தியசாலைகள் யுத்ததின் பின்னர்தான் படுவான்கரைப்பிரதேசத்தில் வளர்ச்சி பெற்று வருகின்றன. அதேவேளை பிள்ளைகளின் பிறப்புவீதங்களும் குறைவாகவே உள்ளன. பிள்ளைப்பிறப்பின் போது சிரமங்களை எதிர்கொள்ளவும் நேரிடுகின்றன. இச்சிரமம், அச்சம் இன்று பிறப்பு வீதத்தினை குறைத்திருக்கின்றது. யுத்தத்திற்கு முன்னரான காலங்களை அவதானிக்கின்ற போது, பிள்ளைப்பிறப்புக்கள் அதிகமாகவே இருந்தன. ஒரு வீட்டில் குறைந்தது நான்கு பிள்ளைகளாவது இருந்தனர். இன்று ஓரிரண்டுடன் நிறுத்திக்கொள்கின்றனர். இங்கு ஏன் கமலாம்பிகை பிறப்பு வீதத்தினைப்பற்றி சொல்ல வருகின்றாள் என்றால், பிள்ளையை பெற்றெடுப்பதென்பது இலகுவானதல்ல. அதன் வலியும், வேதனையும் அவற்றினை எதிர்கொள்ளும் ஒவ்வொரு தாய்க்கும் தான் தெரியும். அதேநேரம் அவர்களை வளர்த்தெடுப்பதென்பதும் சுலபமான விடயமல்ல அனுபவித்தால்தான் அதைப்பற்றி புரிந்துகொள்ள முடியும்.

இவ்வலிகளையும், வேதனைகளையும் தாங்கி பிள்ளைகளைப் பெற்று வளர்த்தார்கள் என்றால் அதுமிகவும் சாதனைதான். இச்சாதனைகளை படுவான்கரை மக்கள் சாதாரணமாகவே புரிந்தனர். இன்று எத்தனையோ நவீன உபகரணங்களைப் பயன்படுத்தியே பிரசவத்தினை மேற்கொள்வதுடன், வயிற்றில் உள்ள பிள்ளை என்ன பிள்ளையென்பதையும் அறிந்து கொள்கின்றனர். ஆனால் தாயின் வயிற்றையும், அவளின் நடத்தையையும் வைத்துக்கொண்டே வயிற்றில் உள்ள பிள்ளை ஆணா? பெண்ணா? என்பதை கிராமத்திலே வாழ்ந்த மருத்துவிச்சு கூறினாள், அத்தனை பிரசவங்களையும் ஒற்றையாய் நின்று செய்துகாட்டினாள் மருத்துவிச்சு. படுவான்கரைப்பிரதேசமே மருவிச்சியாய் இருந்த காலம் கடந்துபோயிற்று. இன்று இப்பெண்களின் சாதனைகளும் மறைக்கப்பட்டதாகிவிட்டன.

கணவனுக்கு துணையாய் நின்று விவசாயத்தினையும், செங்கல் உற்பத்தி போன்ற தொழில்களையும் செய்து காட்டினாள், கடந்தகாலங்களில் ஏற்பட்ட அழிவுகளினால் தம் கணவனையும் இழந்து தம்பிள்ளைகளை வளர்த்தெடுத்தாள். சமுக அமைப்புக்களிலும், சமுதாய செயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்கள். இவ்வாறு பலவற்றிலும் சாதித்து, வேதனைகளையே சாதனைகளாக கொண்டுவாழும் படுவான்கரை பெண்களின் சாதனைகள் மறைக்கப்பட்டதாவிடக்கூடாதென்பதே கமலாம்பிக்கையின் விருப்பு. இவ்வாறு பேசிக்கொண்டிருக்கின்கையிலே உடைந்த தட்டியைக்கொண்ட படகு(பாதை) கரையை அடைந்தது. இருவரும் அவ்விடத்தில் இருந்து அகன்றனர்.

தொடர்ச்சி...

## மகிந்த- மைத்திரி மோதலால் ஜனாதிபதி தேர்தலில் மூன்று பிரதான வேட்பாளர்கள்

கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

இலங்கையில் இந்த ஆண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சகோதரர் கோட்டாபய ராஜபக்ச எதிர்க்கட்சிகளின் வேட்பாளராக போட்டியிடுவார் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இந்த நிலையில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்சுடன் மகிந்த ராஜபக்ச சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் இந்த சந்திப்பு இடம்பெற்றதாக, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச கொழும்பில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். ஆனால் என்ன விடயங்கள் பேசப்பட்டன என்பது தொடர்பாக பசில் ராஜபக்ச எதுவுமே கூறவில்லை. அமெரிக்கத் தூதுவர் அலெய்னாவை மகிந்த சந்தித்து பேசிய பின்னரே மைத்திரிபால சிறிசேனவுக்கும் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையேயான முறுகல் நிலை அதிகரித்தாகவும் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

ஆனால் ஜனாதிபதி வேட்பாளராக மைத்திபால சிறிசேனவின் பெயரை மகிந்த அறிவித்தால் அதனை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஏற்றுக்கொள்ளும் என கட்சியின் ஸ்தாபகரான பசில் ராஜபக்ச செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கின்றார்.

எனினும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவு தொடர்பாக மைத்திரி, மகிந்த ஆகிய இருவரும் கடுமையாக முரண்பட்டுள்ளதாக கட்சித் தகவல்கள் கூறுகின்றன. கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அங்கத்தவர்கள் பலரும் இணக்கம் தெரிவித்துள்ளனர். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மாத்திரமே இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது என்றும் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுத்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் மகிந்த ராஜபக்ச அதற்கு விரும்பவில்லையெனக் கூறப்படுகின்றது. இதனால் மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டு தனித்துப் போட்டியிடுவார் என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டு ஏனைய எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் போட்டியிடுவார் எனவும் உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஏனைய சிறிய கட்சிகளின் ஆதரவுடன் ஐக்கிய தேசிய முன்னணியின் சின்னத்தில் ஜனாதிபதி வேட்பாளரைக் களமிறக்கவுள்ளது.

ஆகவே ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை முக்கியமான மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் எனவும் இதனால் வழமைக்கு மாறாக ஜனாதிபதித் தேர்தலில் கடுமையான போட்டி நிலவும் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, ஜனாதிபதித் வேட்பாளர் தெரிவில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதால் நாடாளுமன்றத் தேர்தலை ஆண்டின் இறுதியில் நடத்த மைத்திரி ஆர்வமாக இருப்பதாகவும் மற்றுமொரு தகவல் கூறுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறலாமென அரங்கம் பத்திரிகை ஏலவே செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி...

## உள்ளூராட்சி மன்றங்களில்...

இதன் மூலம் உள்ளூராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றும் தன்னுடைய சேவையை செவ்வனே செய்ய வாய்ப்பு ஏற்படும். அத்துடன் நமது தேவைகளை நாமே தெரிவிக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. இந்த பொறிமுறையானது உள்ளூராட்சி மக்களோடு இணைந்து செயல்படுகிறது என்கிற உத்தரவாதத்தையும் வழங்குகிறது.

எனவே பொது மக்களாகிய நாம் நமது உள்ளூராட்சி மன்றம் பற்றிய தெளிவோடு வாழவேண்டும். நாம் வாழுகிற கிராமத்தில் உள்ளூராட்சி சேவைகள் தொடர்பாக எழுகின்ற குறைபாடுகளை சுட்டிக்காட்ட முன்வரவேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் சேவைகளை விரிவாக்குவதற்கு நாம் ஒவ்வொருவரும் ஆலோசனைகளை கூறவேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பான வேண்டுகோளை நாம் விடுக்க வேண்டும். இவ்வாறு நமது சமூக பொறுப்பை வெளிப்படுத்துவோமாயின் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் உரிய முறையில் மக்களுக்கான சேவைகளை வழங்கமுடியும்.

மக்களால் குறைபாடுகள் தெரிவிக்கப்படுகையில் உள்ளூராட்சி மன்றங்களின் முதல்வர் அல்லது தவிசாளர்கள் மற்றும் சபை உறுப்பினர்கள் யாவரும் அதன் உண்மைத் தன்மையை அறிந்து அந்தத் தேவையை நிறைவேற்றவேண்டும். பொதுமக்களின் முறைப்பாடுகளைக் கேட்பதற்கும் அந்தக் குறைபாடுகளை களைவதற்கும் முன்வரவேண்டும். இவ்வாறு நிகழுமாயின் பொதுமக்களுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இடையிலான உறவு விரிந்து வருமானங்களையும் இலகுவாக ஈட்டிக் கொள்ளமுடியும். நம்பிக்கையை கட்டியெழுப்புவதன் மூலம் அபிவிருத்திப் பாதையில் விரைந்து செல்ல முடியும். எனவே பொது மக்களாகிய நாங்கள் நமது உள்ளூராட்சியின் குறைகளையும் முறைப்பாடுகளையும் ஆலோசனைகளையும் தயங்காமல் தெரிவிப்பதற்கு முன்வருவோம். இதற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

## அவள்!

நினைவிலுமினியவள்
சுவைதரும் பசியவள்
கனவிலும் நிஜமவள்
கதையிலும் கருவவள்
தேவையில் வரமவள்
என் வாழ்க்கையின் தரமவள்!

அவளென்பது
அவளையும் குறிக்கும்
மகளையும் குறிக்கும்

**-- சிவச்சந்திரன் சிவஞானம்**

# "அரங்கம்" நடாத்தும்

மகளிர் தினம் மற்றும் அரங்கத்தின் ஒரு வருட பூர்த்தி ஆகியவற்றை முன்னிட்டு...

# மாபெரும் மகளிர் கால்பந்தாட்டப் போட்டி



பன்சேனை
பாரி வித்தியாலயம்

எதிர்



அம்பிளாந்துறை
கலைமகள் மகா வித்தியாலயம்

## "அரங்கம்"

மட்டக்களப்பு மாவட்டச் செயலகம்,

மாவட்ட மகளிர் சம்மேளனம் மற்றும் மகளிர் அமைப்புகளுடன் கைகோர்க்கிறோம்.

**இடம்: வெபர் மைதானம்**

**காலம்: 18 – 03 – 2019 (திங்கட்கிழமை)**

**நேரம்: பிற்பகல் 3:00 மணி**

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa